
முப்பெரும் விழா
மலர்
1974
முரசொலி

# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை)

## எண். 151. சேலம்-1.


தொலைபேசி எண்: 2402

கிளைகள்: நாமக்கல் திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம் சிறப்பு அங்காடி சேலம்கடைவீதி, எடப்பாடி பி. கோமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டாபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, பெத்தநாய்க்கன் பாளையம். மேட்டூர்டேம், நாமகிரிப்பேட்டை, கொண்டலாம்பட்டி மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி வாழப்பாடி ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.


## வட்டி விகித வட்டவணை 23-7-1974 முதல்

### கால் டெபாசிட்டுகள்:

| | |
|---|---|
| ரூ. 5000—க்கும் அதற்கு மேலும் [முன் அறிவிப்பு இல்லாமல்] | 3-25% |
| ரூ. 10,000—க்கும் அதற்கு மேலும் [3 நாள் முன் அறிவிப்பின் பேரில்] | 3-50% |

### சீசன் டிபாசிட்டுகள்:

ரூ. 1,000...க்கும் அதற்கு மேலும்

| | |
|---|---|
| 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும் | 3-00% |
| 46 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் | 3-50% |

### பிக்செட் டிபாசிட்டுகள்:

ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு.

| | |
|---|---|
| 91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள் | 5-50% |
| 6 மாதத்திற்கும் அதற்கு மேல் 9 மாதத்திற்குள் | 6-00" |
| 9 மாதத்திற்கும் அதற்கு மேல் 12 மாதத்திற்திகுள் | 7-00" |
| 12 மாதத்திற்கும் அதற்கு மேல் 36 மாதத்திற்குள் | 8-00" |
| 36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60 மாதத்திற்குள் | 9-00" |
| 61 மாதத்திற்கும் அதற்கு மேலும் | 10-00" |
| நடப்பு கணக்கு 0-50% சேமிப்பு கணக்கு | 5-00" |

ரூ. 5000-க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்க வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.
ரெக்கரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன,
இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

**எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ.,**


தலைவர்.

# "IN MEMORY OF A GREAT LEADER OF THE PEOPLE"


TYRES MAY COME TYRES MAY GO

**BUT MANSFIELD GOES ON FOREVER**

(OR SO IT SEEMS)



MRF

**GREETINGS FROM**


**MANSFIELD**

THE TYRE WITH MUSCLE

Manufactured by Madras Rubber Factory Ltd. in collaboration with MANSFIELD TIRE & RUBBER COMPANY. U.S.A.

OVER [illegible] YEARS' TYRE-BUILDING EXPERIENCE

# பல்லவன் போக்குவரத்துக் கழகம்



## புதிய ஐந்து மாடிக் கட்டிடம் வாடைகைக்கு விடப்படும்

சென்னை நகரின் மையப் பகுதியில் அண்ணா சிலைக்கு அருகாமையிலுள்ள பிளாக்கர்ஸ் சாலையில் (காஸினோ தியேட்டர் எதிரில்) கடைகள் மற்றும் அலுவல கங்களுக்கேற்ற புதிய வசதியான ஐந்து மாடிக் கட்டிடம் வாடகைக்கு கிடைக்கும்.

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

செயற்பொறியாளர் (சிவில்)
பல்லவன் போக்கு வரத்துக் கழகம்
"போக்கு வரத்து இல்லம்"
அண்ணாசாலை, சென்னை-600002.

இரா. தில்லை நாயகம் B. E.
நிர்வாக இயக்குநர்
பல்லவன் போக்கு வரத்துக் கழகம்



# உறுதி ஏற்கும் விழா



மூடிய பொற்கதிர் போல நீ இன்று கொண்டு புத்தகம் படிக்கும் என் அண்ணனே! நீ இதுவரை படித்திட்ட புத்தகம் தான் எண்ணிக்கையிலடங் கிடக்கும். உன் உயிர் கொண்டிட வந்த நோயுடன் போராடியவாறு அடையாறு மருத்துவமனையில் நீ படுத்திருந்த போதும், எங்கள் விழிகளெல்லாம் உன் மீது மொய்த்திருக்க — உன் விழிகள் மட்டும் புத்தகமொன்றின் மீதன்றோ மொய்த்திருந்தது! உலகெலாம் புத்தகத்தை விழுங்குவதுபோல் படித்த பின் தாகம் தீர்ந்ததோ? இப்போது நீ படித்துக்கொண் டிருக்கும் புத்தகம் என்ன? உன் மேல் அன்பைத் தூக்கிப்பிடித்த தமிழ் அன்னை, உன் வழிநின்று நிறைவேற்றியுள்ள சாதனைகளின் தொகுப்பைப் புத்தகமாக்கி உன் கையில் வழங்கியுள்ளாளே! அதைத்தான் அத்துணை கவனத்துடன் படித்துக் கொண்டிருக்கிறாயோ! தம்பியுடையான் படைக் கஞ்சான் என அறிந்த தெம்புடன் கூறுவாயே;

அதற்கான விளக்கத்தை நீயே எழுதி, அதைத் தம்பித் திரளைப் படிக்க வைக்கிறாயோ? நீ வகுத் துள்ள தம்பியர் பட்டியலில் யார் யார் இருக்கிறார் களோ நானறியேன் அண்ணா! நாடறியும் அண்ணா! என்னுடன் உன் காலடி மண்ணை எடுத்துக் கண்ணில் அப்பிக்கொண்டு நீ இட்ட கட்டளைகளை நிறைவேற் றியவர்கள் — நாடு போற்றும் கட்சி, கல் வீரர்கள் கட்டித் திட்டங்கள் தாம் இந்தக் கழகம் வளர்த்த வர்கள் — நீ காட்டிய களம் சென்று உயிர் தரத் துணிந்தவர்கள் — சிறைச்சாலை சித்திரவதை யின் கொடுமை தாங்கிக் கொண்டவர்கள் — நீ விட்டுச்சென்ற புகழையே உடலில் அணிந்து கொண்ட ஒப்பற்ற தொண்டர் கோடியவர்கள் — இவர்கள் எல்லாம் தான் உன் தம்பிகள்! அந்தத் தம்பிகளைக் கொண்ட நீ படைக்கு அஞ்சிடத் தேவையில்லை. அஞ்சமாட்டாய். இன்றும் நீ அஞ்சிடத் தேவையில்லை. இங்கே நீ எனது நான் குறிப்பிடுவது — கொள்கை வழுவாமல் நின்றிட்ட கழகத்தைத் தான். நீயே கழகம். கழகமே நீ.

நீ அப்படிச் சொல்லமாட்டாய். இதில் அந்த உன் தன்மையைச் சொல்ல எங்களுக்கு உரிமை உண்டு. அந்த உரிமையுடன் உனக்குடன் உழைத்திட வேண்டும் நோக்கோடு! அந்த உறுதி ஏற்கும் விழாதான் இன்று நாங்கள் கொண்டாடும் வெற்றி விழா! எங்களுக்கு நீ காத்துவருவாய் இருக்கும் அண்ணனே — நீ எழுந்து கொடுத்த இலட்சியங்களைக் காப்பாற்ற உன் கட்டளை அருள் பட்டதே எங்கள் வேல்! அதுவரை ஓயமாட்டோம்.

உன் அன்புத் தம்பி

மு. கருணாநிதி


15/9/1974



...தந்தை பெரியார் அவர்களின் 89 வது பிறந்த நாள் விழா அன்று விடுதலை வெளியிட்ட மலரில் பேரறிஞர் அண்ணா 1967ஆம் ஆண்டு எழுதிய கட்டுரை...

# அந்த வசந்தம்

## — பேரறிஞர் அண்ணா



எனக்கென்று ஒரு வசந்த காலம் இருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஆண்டு பலவற்றுக்குப் பிறகு--அந்த வசந்த காலத்தை நினைவிலே கொண்டு இன்றைய கவலைமிக்க நாட்களிலே எழ முடியாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன்.

பெரியாருக்கு அந்த 'வசந்த காலமும்' தெரியும். இன்று நான் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.

'வசந்தகாலம்' என்றேனே அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் 'காடு மேடு' பல சுற்றிவந்த நிலை.

அந்தக் 'காடு மேடுகளில்', நான் அவருடன் தொண்டாற்றியபோது, வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன்! நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

அப்போது 'கலவரம் எழாமல்' ஒரு பொதுக் கூட்டத்தை ஒழுங்காக நடத்திட முடிந்தால் போதும் — பெரிய வெற்றி என்ற பெருமிதம் தோன்றும்.

புறப்படு முன்னர் தலை போகும் — தாடி போகும் — தடி போகும் — உயிர் போகும் என்ற மிரட்டல் கடிதங்களைப் படித்திட வேண்டிய நிலை.


அண்ணாதுரை! இதைப் பார்த்தாயா என்று ஒரு கடிதத்தை வீசுவார்—ஆமாமய்யா! என்று பொருளற்ற ஒரு பதில் தருவேன். வருகிறாயா என்று என்னைக் கேட்க மாட்டார். வருவேன் என்பது அவருக்கு நன்கு தெரியுமாதலால் செல்வோம். பெரியாரின் பேருரை நிகழ்த்தப்படும். வந்தவர்களில் உருட்டல் மிரட்டல் கடிதம் எழுதியவர் இருந்திருப்பின் அடுத்த கூட்டத்திற்கு அவர் அய்யாவிற்காக 'மாலை' வாங்கிக்கொண்டுதான் வருவார். அத்தகைய தெளிவும், வாதத் திறமையும் பேச்சில் கிடைக்கும்.

அத்தகைய தெளிவுரையால் பலர், பலப்பலர், திருந்தியோர் என்பது மட்டுமல்ல, தமிழகத்திலேயே ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டு விட்டிருக்கிறது.

ஒருவர் புறப்பட்டு ஓயாது உழைத்து உள்ளத்தைத் திறந்து பேசி எதற்கும் அஞ்சாது பணியாற்றி ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும் எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை.

அந்த 'வரலாறு' துவக்கப்பட்டபோது நான் சிறுவன்.

அந்த வரலாற்றிலே புக ஏடுகள் புதிது புதிதாக இணைக்கப்பட்ட நாட்களிலே ஒரு பகுதியில் நான் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். அந்த நாட்களைத்தான் என் வசந்தம் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.



பெரியாருடன் சேர்ந்து பணியாற்றியவர் பற்பலர். அவருடன் மற்ற பலரையும் விட இடைவிடாது இருந்திடும் வாய்ப்பைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள். இன்றும் நினைவிலே கொண்டு வரும்போது இனிமை பெறுகின்றேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடலின் மூலம் தந்திருக்கிறார்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதனை நான் கற்றுணரும் வாய்ப்பும் தந்தார்.

பொதுத் தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும் அக மகிழ்வும், மன நிறைவும் பெற்றிடச் செய்தார்.

கோபத்துடன் அவர் பலரிடம் பேசிடக் கேட்டிருக்கிறேன்; கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன்; உன்னை எனக்குத் தெரியும் போ! என்று உரத்த குரலில் கூறியதைக் கேட்டிருக்கி

தேன்; ஒருநாள் கூட என்னிடம் அவர் அவ்விதம் நடந்து கொண்டதில்லை. எப்போதும் ஒரு கனிவு, எனக்கென்றே தனியாக வைத்திருப்பார். என்னைத் தமது குடும்பத்தில் பிறவாத 'பிள்ளை' எனக் கொண்டிருந்தார்.

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவனைத்தான்

இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார். — நான் அவருடன் இணைந்த போது; முப்பது ஆண்டுகளுக்கு முன்பு.

அதற்கு முன்பு முப்பது ஆண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார்.

இந்த 'ஆண்டுகள்' தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள்; திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்கிறாரே! — என்று கூறியும், விட்டு வைக்கக் கூடாது ஒழித்துக் கட்டியாக வேண்டும்! நானே தீர்த்துக்கட்டுகிறேன்! — என்று மிரட்டியும் — தமிழகத்துள்ளாரில் பலர் பேசினர்; ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர்; மறுப்பு உரைத்தனர்; ஆனால் அவர் பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர்; மூலையில் நின்றுகிலும் மறைந்திருந்தாகிலும் அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது. எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள், ஏனோதானோ என்று இருந்தவர்கள் தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர். கொதித்தவர்கள் அடங்கினர்; மிரட்டினோர் பணிந்தனர்; அலட்சியம் செய்தோர் அக்கறை காட்டினர். அவருடைய பேச்சோ! அது தங்கு தடையின்றி, வேகம் குறையாமல், பாய்ந்தோடி வந்தது; மலைகளைத் துளைத்துக்கொண்டு, கற்களை உருட்டிக்கொண்டு காடுகழனிகளை வளம்பெறச்செய்துகொண்டு ஓசை நயத்துடன், ஒய்யார நடையுடன்! அங்கே பேசுகிறார்; இங்கே பேசுகிறார், அதைக் குறித்துப் பேசுகிறார், இது குறித்துப் பேசுகிறார் — என்று தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாகக் கூறி வருகிறது.


மனதிற் பட்டதை எடுத்துச் சொல்வேன் — எது நேரிடினும் — என்ற உரிமைப்போர்! அவருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி மிகப் பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை; இன்று அனைவரும் பெற்றுள்ளனர் — அந்த வெற்றியின் விளைவுகளை. இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன் மனதிற்குச் சரியென்று பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல்கட்ட வெற்றி இது! இதற்கு முழுக்க முழுக்க பொறுப்பாளர் பெரியார்! இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப்பெரிது.

தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலை இந்தியாவில் வேறு எங்கும் காண முடியாது. பிற பகுதியினர் இதுபற்றிக் கேள்விப்படும்போது, வியர்த்துப் போகின்றனர். அப்படியா! — முடிகிறதா! — நடக்கிறதா! — விட்டுவைத்திருக்கிறார்களா! — என்று கேட்கிறார்கள்; சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு.

அரித்துவாரம், கல்கத்தா, பாட்னா, கான்பூர், காசி, லாகூர், அலகாபாத், அமிர்தசரஸ் மேலும் இதுபோன்ற பல நகர்களில், என்னையும் உடன் அழைத்துக்கொண்டு பெரியார் சுற்றுப் பயணம் செய்தபோது — ஒவ்வொரு ஊரிலும் இதுபோலத்தான் கேட்டனர். யார்? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவாதிகள்!

அந்த இடத்துப் பகுத்தறிவாதிகள் படிப்பார்கள் — பெரிய பெரிய ஏடுகளில் எழுதுவார்கள் அழகழகான கட்டுரைகளை! கூடிப் பேசுவார்கள் சிறிய மண்டபங்களில் போலீஸ் பாதுகாப்பு பெற்றுக்கொண்டு! இங்கு?

இங்கா! அவர் பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத 'பழமை' உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்! எதற்கு அவர் பணிந்தார்! எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது? ஏ. அப்பா! ஒரே ஒருவர் அவர் நம்மை அச்சு வேறு ஆணி வேறாக எடுத்தெடுத்து வீசுகிறாரே; என்று இந்நாட்டை என்றென்றும்விட்டுப் போவதில்லை என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த 'பழமை' அலறலாயிற்று! புதுப்புது பொருள் கொடுத்தும் இன்று பழமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எனினும், விழுந்த அடியால் அடித்தளம் நொறுங்கிப்



'மனதிற் பட்டதை எடுத்துச் சொல்வேன் எது நேரிடினும்' என்ற உரிமைப்போர் பெரியாருடையது. அந்த வெற்றியின் விளைவு அனைவருக்கும் கிடைத்துள்ளது.

— அண்ணா

போய் விட்டிருக்கிறது என்பதனை அறியாதார் இல்லை!

எனவேதான் பெரியாருடைய பெரும்பணியை, நான் 'ஒரு தனி மனிதனின் வரலாறு என்றல்ல, ஒரு சகாப்தம் — ஒரு காலகட்டம்.. ஒரு திருப்பம்... என்று கூறுவது வாடிக்கை.

அக்கிரமம் தென்படும் போது, மிகப் பலருக்கு அது தன்னைத் தாக்காதபடி தடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும், ஒதுங்கிக் கொள்வோம் என்ற பாதுகாப்பு உணர்ச்சியும் தான் தோன்றும். எதிர்த்து நிற்க வேண்டும் என்ற எண்ணம் எளிதில் எழுவதில்லை.

பெரியார், அக்கிரமம் எங்கு இருந்திடக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படினும் எத்துணைப் பக்கபலத்துடன் வந்திடினும் அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை.

அவர் கண்ட களம் பல; பெற்ற வெற்றிகள் பலப்பல! அவர் தொடுத்த போர் நடந்தபடி இருக்கிறது! அவர் வயது 89! ஆனால் போர்க்களத்திலே தான் நிற்கின்றார்!

அந்தப் போரில், ஒரு கட்டத்தில் அவருடன் இருந்திடும் வாய்ப்பினைப் பெற்ற நாட்களைத்தான் 'வசந்தம்' என்று குறிப்பிட்டேன்.

மேலும் பல ஆண்டுகள் அவர் நம்முடன் நமக்காக வாழ்ந்திருக்க வேண்டும். தமிழர் வாழ்வு நல்வாழ்வாக அமைவதற்குப் பல்நெடுங்காலமாக இருந்துவரும் கேடுகள் களையப்படுவதற்கு அவருடைய தொண்டு தொடர்ந்து அளிக்கப்பட்டு வரும் என்பதில் ஐயமில்லை!

வாழ்க பெரியார்!





# வெற்றிக்கு வித்திடும் வெள்ளி விழா

## கழகப் பொதுச் செயலாளர் நாவலர்


பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவினையும் இணைத்துத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெள்ளி விழாவினைக் கொண்டாடும் வாய்ப்பினை இவ்வாண்டு நாம் பெற்றிருப்பது, நமக்கெல்லாம் தன்ப்பெரு மகிழ்ச்சியினையும், பெருமிதவுணர்வையும் அளிப்பதாகும்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளைத் திரும்பிப்பார்க்கிறோம்! திராவிட முன்னேற்றக்கழகம் எதிர்ப்புக்களையும், ஏளனங்களையும், கொலைகளையும், கொடுமைகளையும், அடக்குமுறைகளையும், அதிகாரத் தாக்குதல்களையும், இழிச்சொற்களையும், பழிச்சொற்களையும் தாங்கிக்கொண்டு, எதிர்நடைபோட்டுச் சமாளித்து முன்னேறி வந்த அடிச்சுவடுகள் நமது கண்களுக்குப் புலனாகின்றன. எவ்வளவு அறிவுத்திறனோடும் ஆற்றல் திறனோடும், பண்பாட்டுத் திறனோடும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மையெல்லாம் வழி நடத்தி வந்தார் என்பதை எண்ணிடும்போது வியப்புணர்ச்சி பேலிடுகிறது.

திராவிட முன்னேற்றக்கழகத்தைக் கட்டிக் காத்து வளர்த்து வரும் பணிகளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஈடுபட்ட ஒவ்வொரு கட்டத்திலும் அவர் இட்ட கட்டளை ஏற்று நடத்தும் தொண்டர்களில் நானும்ஒருவனாகஇருந்து வந்திருக்கிறேன் என்று எண்ணுந்தொறும் உள்ளத்தில் உவகைப் பெருக்கு ஏற்படுகிறது. என்னைப் போன்று உவகைப் பெருக்கில் மூழ்கித் திளைக்கின்ற தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் — பதினாயிரக்கணக்கில் — இலட்சக்கணக்கில் நாடெங்கணும் பரந்து காணப்படுகிறார்கள். அறிஞர் அண்ணா அவர்களை நாமெல்லோரும் பெருமதிப்போடும், பெருமகிழ்ச்சியோடும் தலைவராக — வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டோம்; அறிஞர் அண்ணா அவர்களும் நம்மிடம் பேரன்பும் பேராதரவும் காட்டி நம்மையெல்லாம் தொண்டர்களாக ஏற்றுக்கொண்டார்கள். அதன் விளைவுதான் திராவிட முன்னேற்றக் கழக அமைப்பு. 'அண்ணா அவர்கள் தலைவர், நாமெல்லோரும் தொண்டர்கள்' என்று வழக்கமான அரசியல்கட்சி முறைக்கேற்பதான் குறிப்பிட்டாலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு குடும்பமாகவும், நாமெல்லோரும் அண்ணன்—தம்பி என்ற உறவுமுறையோடுதான் அறிஞர் அண்ணா அவர்களால் அழைக்கப்பட்டோம். அறிஞர் அண்ணா அவர்களை 'அண்ணன்' என்று அழைப்பதிலே நாம் தனி இன்பம் கண்டோம்; அதுபோல அறிஞர் அண்ணா அவர்களும் நம்மையெல்லாம் 'தம்பிமார்கள்' என்று அழைப்பதிலே தனி இன்பம் கண்டார். தி. மு. கழகத்தைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சியிலும் இந்த முறை வளர்க்கப்பட்டதில்லை — போற்றப்பட்டதில்லை. மற்ற கட்சிகளில் தலைவர் — ஊழியர் என்ற உறவுமுறைதான் உண்டு; தி. மு. கழகத்தில் மட்டுந்தான் அண்ணன் — தம்பி என்ற உறவு முறை என்றென்றும் நீடித்து வருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் தெளிவும், எழுத்தாற்றல் திறனும், சொல்லாற்றல் வன்மையும் கலையார்வமும், பிரச்சினைகளை அமைதியாக அணுகும் முறையும், எளிமையான போக்கும், பெருந்தன்மைப் பண்புந்தான் தி.மு.கழகத்தை நாளுக்கு நாள் வளர்த்து 1967ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்படி செய்தன.

ஒரு கட்சி ஏளனத்திற்கிடையே தோன்றி, கடும் எதிர்ப்புக்களிடையே வளர்ந்து பொதுமக்களின் அன்பையும்— ஆதரவையும் — மதிப்பையும்— நம்பிக்கையையும் படிப்படியாகப் பெற்று, எதிர்க்கட்சிகளின் ஆதிக்க அதிகார வலிவுகளைச் சிறுக சிறுக வீழ்த்திப், பதினெட்டாவது ஆண்டில், தனியொரு கட்சியாக இருந்து ஆட்சி நடத்தும் தனிப்பெரும் சிறப்பினைத் தி. மு. கழகத்தைத் தவிர இந்தியாவில் வேறு எந்த ஒரு கட்சியும் எந்த ஒரு மாநிலத்திலும், எப்பொழுதும் பெற்றதில்லை.



1952இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிடும் நிலையைப் பெறவில்லை. தேர்தல் காலத்தில் போட்டியிடும் துணிவோ — வலிவோ அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்களுக்கோ, கலைஞர் பேராசிரியர் ஆகியோர்க்கோ எனக்கோ ஏற்படவில்லை. தி. மு. கழகத்தின் கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும் மதிப்பு தந்த தோழமைக் கட்சிகளுக்கு மட்டுமே நாம் ஆதரவு தந்தோம். 1957ம் ஆண்டில்தான் முதன் முதலாகத் தி. மு. கழகம் நேரிடையாகத் தேர்தல் களத்தில் இறங்கிற்று. 15 சட்டமன்றத் தொகுதிகளிலும் 2 பாராளுமன்றத் தொகுதிகளிலும் மட்டுமேதான் வெற்றிபெற முடிந்தது என்றாலும், உதய சூரியன் சின்னத்திற்குச் சுமார் 14,20,000 வாக்குகள் கிடைத்தன. 1962 பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்திற்கு 50 சட்டமன்ற இடங்களும், 8 பாராளுமன்ற இடங்களும் கிடைத்ததோடு உதயசூரியன் சின்னத்திற்கு மட்டும் சுமார் 34,40,000 வாக்குகள் விழுந்தன. 1967 பொதுத் தேர்தலில் போட்டியிட்டபோது தி.மு. கழகம் 138சட்டமன்ற இடங்களையும், 25 பாராளுமன்ற இடங்களையும்பெற்றது.

அந்தத் தேர்தலில் தி.மு. கழகத்திற்கு மட்டும் விழுந்த மொத்த வாக்குகள் சுமார் 62,10,000 ஆகும். மூதறிஞர் இராசகோபாலாச்சாரியார் அவர்களும், காங்கிரசின் தலைவர் காமராசர் அவர்களும் சேர்ந்து நின்று தி. மு. கழகத்தைக் கடுமையாக எதிர்த்த 1971—ஆம் ஆண்டில் தி. மு. கழகம் 182 சட்டமன்ற இடங்களையும், 23 பாராளுமன்ற இடங்களையும் பெற்றதோடு மட்டுமில்லாமல், உதய சூரியன் சின்னத்திற்கு ஆதரவாகச் சுமார் 76,10,000 வாக்குகளையும் பெற்றது. தி. மு. கழகம் பொது மக்களின் ஆதரவையும், நம்பிக்கையையும் எப்படிப் படிப்படியாகப் பெற்று வளர்ந்தோங்கி வந்திருக்கிறது என்பதை மேற்குறிப்பிட்ட புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்தும்.

தி. மு. கழகம் பொது மக்களின் மதிப்பையும், நம்பிக்கையையும் பெறுவதில் எவ்வளவுக்கெவ்வளவு வெற்றி பெற்று வந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு கழகம் தேர்தல் களத்திலும் வெற்றி பெற்று வந்திருக்கிறது என்பது தெளிவாகப் புலனாகிறது.

வெள்ளி விழாக் கொண்டாடி பொன் விழாக் கொண்டாடும் காலத்தை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் நாம் பொதுமக்களிடையே கழகத்திற்குள்ள செல்வாக்கையும் மதிப்பையும் வளர்ப்பதோடு மட்டுமல்லாமல், பொது மக்களின் அரவணைப்பிற்கும் நம்பிக்கைக்கும் உரிய கழகமாக ஆக்கிடும் பணியில் இடையறாது தொடர்ந்து ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தி. மு. கழகத்தினிடத்தில் பொது மக்கள் கொண்டிருக்கும் மதிப்பையும், நம்பிக்கையையும் சீர்குலைப்பதற்குப் பகைக் கட்சிகளும், துரோகக் கட்சியும் வஞ்சகம் —சூது — சூழ்ச்சி போன்ற பல வேறு இழிசெயல்களில் ஈடுபட்டிருக்கின்றன. பொது மக்களின் ஆதரவையும், அரவணைப்பையும் வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு, ஊருக்கு ஊர், தொகுதிக்குத் தொகுதி பெறுவதில் ஏற்படும் வெற்றிதான் வெள்ளிவிழாக் கொண்டாடுவதில் ஏற்படும் வெற்றியாகும்.

1976இல் தி. மு. கழகத்தின் வெற்றி விழாவிற்கு வித்திடும் விழாவாக வெள்ளி விழா அமையட்டும்! ஆர்வமும் எழுச்சியும் எங்கணும் மிளிரட்டும்! கழக வீரரும் வீராங்கனையரும் புலியெனச் செயல் செயப் புறப்படட்டும்! நாடெங்கணும் வெள்ளமெனப் பரந்து கிடக்கும் கழகத் தோழர்கள் அனைவரும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருப்பெயரை இதயத்திலே தாங்கிக் கடமையாற்ற, அதனையும் கண்ணியத்தோடு ஆற்ற, அதனையும் கட்டுப்பாட்டோடு ஆற்ற முன்வருவார்களாக!

---

## சத்தியமூர்த்திக்கு ஒரு பிரச்சினை

1937—லே சென்னை பெத்துநாயக்கன் பேட்டையிலேயிருந்து மாநகராட்சி உறுப்பினர் தேர்தலுக்கு நீதிக் கட்சியின் சார்பில் அண்ணா நிறுத்திவைக்கப்பட்டபோது நடந்தது இது:

காங்கிரஸ் சார்பில் அண்ணாவுக்கு எதிராக ஒரு பட்டதாரி நிறுத்தப்பட்டிருந்தார். அவருக்கு ஆதரவுப் பிரச்சாரம் செய்வதற்காக காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி அரிசனத் தெருக்களுக்கெல்லாம் வந்து மக்களிடம் வாக்குக் கேட்டார்.

என்னதான் காங்கிரஸகாரர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிக்கு வந்தாலும், அவர்களிடம் தீண்டாமையும், ஜாதீய உணர்ச்சியும் போகவில்லை என்பதை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உணர்த்தும் வகையில் அண்ணா செய்த யுக்தி அன்று காங்கிரஸ்காரர்களுக்கு பெரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துவிட்டது.

தாழ்த்தப்பட்ட மக்களிடம்போய் அண்ணா கூறினார்: ''சத்தியமூர்த்தி பெரிய தலைவர். தீவிர காந்தியவாதி. அவர் உங்கள் வீடு தேடி வந்து வாக்குக் கேட்கும்போது அவருக்கு மரியாதை காட்டும் வகையில் உங்கள் வீட்டிலிருந்து ஒரு குவளைத் தண்ணீர் கொடுங்கள். அல்லது இயன்றவர்கள் ஒருவேளை சாப்பாடு சாப்பிடச் சொல்லுங்கள். நமது வீட்டில் சாப்பிட்டுத் தண்ணீர் குடிக்கிறவர்களை நாம் ஆதரிப்பதில் தவறு ஒன்றுமில்லை!''

இப்படி அண்ணா கூறியது ஆசாரத்தில் ஊறியவர்களைத் திணற வைத்து விட்டது!

(தென்னிந்திய நல உரிமைச் சங்கமாகத் தொடங்கிய திராவிடர் பேரியக்கம் நீதிக் கட்சியாக அழைக்கப்பட்டது. தி.மு. கழகம் வெள்ளி விழாக்காணும் இந்த வேளையில் நமது பாரம்பரியம் பற்றி நினைவு கூர்வது புதிய தலைமுறையினர்க்கு உதவுவதாக அமையும். —ஆ-ர்)

# நீதியின் அடிப்படையில்



**கழகப் பொருளாளர்-பேராசிரியர்**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம்! ஆங்கிலேயரது ஆட்சியில் முறையான கல்வி பரவத் துவங்கிய நிலை. பொது அறிவு பெறுவதில் மக்கள் ஆர்வங் கொள்ளத் தலைப்பட்டனர்.

ஆட்சி நடைபெற்றுவந்த முறை பற்றியும், அரசியலில் தாமும் இடம்பெற வேண்டிய அவசியம் குறித்தும் எண்ண முற்பட்டனர் மக்கள். அரசாங்கப் பணிகளில் இடம் பெறுவதில் மக்கள் போட்டியிடலாயினர்.


நாட்டின் முழு உரிமையாகிய விடுதலையே தமது குறிக்கோளாகக் கொண்டவர்களும், தமது வேட்கையை வெளிப்படுத்தினர். ஆனால் 'விடுதலை' பற்றிய தெளிவும், உறுதியும் மக்களிடையே வளராத நிலை.

மக்கள், தமது உரிமைகளை, தாம் செய்யும் தொழில், அடையும் பதவி, கல்வி பெறும் வாய்ப்பு, சமூகத்தில் எய்தும் மதிப்பு இவைகளைக் கொண்டே கணக்கிட்டனர். சமூகவாழ்வில் உயர்நிலை எய்தவும் மதிக்கப்படவும் எவை எவை துணையாவனவோ அவையே ஒவ்வொருவரும் அடைய விரும்பிய உரிமைகளாக நிலவின.

அந்நியர் ஆட்சியில், அடிமைச் சூழலில் நாட்டு விடுதலைப் பற்றிய தெளிவு மேலோங்கு முன்னர் மற்ற மற்ற உரிமைகளைப் பற்றிய எண்ணமே மேலோங்கி நின்றது இயல்பேயாகும்.

சமுதாயத்தில் பல்வேறு காரணங்களால் — ஏற்றத் தாழ்வுகள் கற்பாறைபோன்று உடைக்க முடியாத நிலை பெற்றிருந்தது. அவை நாளும் வலிவு பெற்று ஏற்றத்தாழ்வு மிகுவதற்கு சூழ்நிலை இடந் தந்ததால், வேற்றுமை உணர்ச்சியும் ஓங்கியது. உயர் பிறப்பு-இழி பிறப்பு; மேலான தொழில்-தாழ்வான தொழில்; ஆகிய பழக்க வழக்கங்களோடு ஒட்டிய நம்பிக்கைகளால், நிலை நிறுத்தப்பட்ட பொருளாதார ஏற்றத் தாழ்வு அந்த நிலையை மாற்ற முடியாத தடையாக நின்றதுடன், மேலும் வேற்றுமையை வளரச் செய்தது.

குறிப்பாக எந்தக் காரணத்தால் ஒரு சமூகத்தினர் (சாதியினர்) உயர் நிலையோ, மதிப்போ பெற்றிருந்தாலும் அதை அவர்கள் தமது உரிமையாகவும், இறைவனது ஏற்பாடாகவும் நம்பிக் கொண்டு அதை மாற்றிக் கொள்ளவோ, இழக்கவோ ஒருப்படாது— எப்பாடுபட்டேனும் காத்துக் கொள்ளவே கருதினர். அதே போன்று, தமது சமுதாய நிலையோடு ஒட்டித் தாழ்வு மனப்பான்மையைப் பெற்றிருந்தவர்களும் அதை உதறித் தள்ளவும் துணிவின்றி —சமத்துவ நிலையைக் கேட்டுப் பெறவும் முடியாத நிலையில் இருந்தனர். இதனால் தாழ்ந்தவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், பல்வேறு வகையான இழிவுக்காளாயினர். சமுதாயம் இரண்டு முனைகளிலும் இழுக்கப்பட்டு, சமநிலை குலைந்து, நைந்து போய்க் கொண்டிருந்தது.



இந்த நிலை — பழைய நம்பிக்கைகளோடு ஒட்டியதாக இல்லாது பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் மட்டும் கட்டப்பட்டிருந்திருப்பின், ஓரளவு தெளிவும் எதிர்க்கும் துணிவும் ஏற்பட்டவுடன் மேல் நாடுகளைப் போன்று, கடும் புரட்சி தோன்றியிருக்கக் கூடியும். அடித்தட்டு மக்கள் மேல்தட்டு மக்களோடு சமத்துவம் எய்த மோதும்போது அது வன்முறைப் புரட்சியாக விளைவது இயற்கையே; ஆனால் நெடுங்காலப் பழக்கமும், ஊறிப்போன நம்பிக்கைகளும், வளர்ந்திருந்த அமைதிப் பண்பும், அயலவர் ஆட்சிக்கு ஆட்பட்டிருந்த நிலையும், 'புரட்சி'க்கு இடம் அளிக்கவில்லை.

மாறாகப் பல்வேறு உரிமைக் கிளர்ச்சிகள், நியாய வாதங்கள், இயக்கங்கள், அமைதிக்குக் கேடின்றிப் பிறந்தன. அதன் பயனாக சமத்துவ வாழ்விற்கான பாதை வகுக்கப்படலாயிற்று.

அவ்வாறு பிறந்த இயக்கங்களுள், வரலாற்றில் இடம் பெறத்தக்க தலையான மாற்றத்தைத் தென்னகத்தில் ஏற்படுத்திய பெருமை நீதிக் கட்சியைச் சேரும்.

1917-ம் ஆண்டில், அரசாங்கப் பணிகளில், மேல் வகுப்பார் பெற்றிருந்த மிகுந்த இடத்தையும், பிற வகுப்பார் பெரும்பான்மையோராக இருந்தும் பெற்றிருந்த குறைந்த அளவு இடத்தையும் ஒப்பிட்டு நோக்கிய, வெள்ளுடைவேந்தர் சர். பி. தியாகராயர் அவர்கள், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தோற்றுவித்தார். ஆற்றல்மிக்க பேச்சாளரும், எழுத்தாளருமாக விளங்கிய டாக்டர் டி.எம். நாயர் அவர்கள், அதற்குத் துணை நின்று 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' கண்டார். அந்த இயக்கத்திற்கு ஆதரவு திரட்டுவதற்கு, அவர் நடத்திய 'ஜஸ்டிஸ்' என்னும் ஆங்கில ஏட்டின் பெயரே — அந்தக் கட்சியைக் குறிக்கும் பெயராகவும் வழங்கப்படலாயிற்று. அந்த இயக்கத்தின் பெருந்தலைவர்களாக விளங்கியவர்களுள், தன்னலங் கருதாது பொதுநலம் பேணிய டாக்டர் சி. நடேச முதலியார் அவர்களும், சிறந்த அரசியல் விற்பன்னர் என்று புகழ் பெற்ற பனகல் அரசர் அவர்களும் சட்டமன்றத்தில் வாதாடும் திறன் மிக்கவராக விளங்கிய சர். கூர்ம வெங்கடரெட்டி அவர்களும், பெருந்தன்மை வாய்ந்த சர். முகம்மது உஸ்மான் அவர்களும், பின்னாட்களில் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்ட சர். ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்களும், ஆற்றல் மிகுந்த சர். பி. இராசகோபாலாச்சாரியார் அவர்களும், அமைச்சராகத் திகழ்ந்த எம். ஆர். சேதுரத்தினம் அய்யர் அவர்களும், வகுப்புவாரி உரிமைக்கு அரசாங்க ஆணை பிறப்பித்த முன்னாள் அமைச்சர் எஸ். முத்தையா முதலியார் அவர்களும், பின்னாட்களில் காங்கிரசில் சேர்ந்து விளங்கிய டாக்டர் சுப்பராயன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். அந்த இயக்கத்தின் சார்பிலே நின்று செல்வாக்குப் பெற்று அகில உலகப் புகழ்பெற்ற பெருமக்கள்தான், சர். ஆர்.கே. சண்முகம் செட்டியாரும், டாக்டர் சர். ஆற்காடு இராமசாமி முதலியாரும், டாக்டர் சர். இலட்சுமணசாமி முதலியாரும் ஆவர். நீதிக் கட்சியின் — கருத்து விளக்க எழுத்தாளராகப் பெருமை பெற்றவர்களுள் மறைந்த டி. ஏ. வி. நாதன், சண்டே அப்சர்வர், பி. பால சுப்பிரமணியம், ஜனக சங்கர கண்ணப்பர் (ஜே. எஸ். கண்ணப்பர்) ஆர். திருமலைசாமி ஆகியோரும் பேச்சாளராக விளங்கியவர்களுள், ஜே. என். இராமநாதன் — திண்டுக்கல் டி.வி. சுப்பிரமணியம், திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், அ. பொன்னம்பலனார் ஆகியோரும் தலையானவராவர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் நீதிக் கட்சியால் பாராட்டப்பட்ட பேச்சாளராகத்தான் அரசியலில் அடி எடுத்து வைத்தார்கள்.

நீதிக் கட்சி தளர்ந்த நிலையில், அதை தலைவராக அமர்ந்து நடத்தியவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் — தீண்டாமை — பாராமை முதலான கொடுமைகளிலிருந்து விடுபடவும்— பொது இடங்களான தெருவில் நடமாடவும், குடிநீர் கிணற்றில் தண்ணீர் எடுக்கவும், பிறரோடு ஒன்றாக இருந்து உண்ணவும்—நீதிக் கட்சி வகை செய்தது. அவ்வாறு — ஆதிதிராவிட மக்கள் உரிமைக்கு வழிகண்ட நீதிக் கட்சியில் பெருந்தலைவர்களாக விளங்கியவர்கள் தாம், எம். சி. ராசா அவர்களும், இரட்டைமலை சீனிவாசன் அவர்களும், என். சிவராஜ் அவர்களும் ஆவர்.

இரட்டை ஆட்சி முறை ஏற்பட்ட காலத்தில்—அதில் பங்கு கொண்டு, இந்தியர்களும் சிறந்த ஆட்சி நடத்திக் காட்ட முடியும் என்று உணர்த்திய பெருமை நீதிக் கட்சியையே சாரும். அவ்வாறு நடத்திய ஆட்சிக் காலத்தில், தமது மதிப்பை இழக்காது, வெள்ளையரும் பாராட்டுமாறு பல சீர்திருத்தங்களையும் நிறைவேற்றினர்.

நீதிக்கட்சி காலத்தில்தான் புகழ்பெற்று விளங்கிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களும், அலமேலு மங்கைத் தாயார் அம்மாளும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களும் மேற்கொண்ட முயற்சியின் பயனாக — தேவதாசி ஒழிப்பு மசோதா கொண்டு வரப்பட்டு பொட்டு கட்டும் வழக்கம், முறையற்றது என சட்டம் செய்யப்பட்டது.

மக்களிடையே சமவாய்ப்பு ஏற்படும் வகையில், அமைச்சராக விளங்கிய வழக்கறிஞர் எஸ். முத்தையா முதலியார் அவர்கள், வகுப்புவாரி முறை அரசாங்க ஆணையைப்பிறப்பித்த காலத்தில் பிறந்த கண்டனம் மிகவும் பெரிதாகும். ஆயினும் கண்டனங்களுக்கு அஞ்சாது, நியாயத்தை விளக்கிக் கூறி எதிர்ப்புகளுக்குத் தலைவணங்காது அதனைச் செயல்படுத்தி, அரசாங்கப் பணிகளில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட சமநிலைக்கு வழி கோலிய பெருமை அவரையும், நீதிக் கட்சியையுமே சாரும்.

தாழ்த்தப்பட்ட, தீண்டப்படாத மக்கள் பல கல்வி நிலையங்களில் சேர்க்கப்பட முடியாத கொடுமையை ஒழித்துக்கட்ட, அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மறுக்கப்படாது சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியநிலையை— அரசாங்க ஆணை மூலம் தோற்றுவித்ததும் நீதிக்கட்சியே.

நாட்டில் கல்வி நிலையங்கள் பெருகவும், கல்வித் தரம் உயரவும், நல்ல நெடுஞ்சாலைகள் அமையவும் நீர்ப்பாசனம் சிறக்கவும், சுகாதாரமும் மருத்துவ வசதியும் பரவவும், நல்ல நிர்வாகமும் ஆட்சியும் நிலவவும் அடிகோலியது நீதிக் கட்சியே என்றால் மிகையாகாது.

தமிழகத்தில் தொன்று தொட்டு உளதாகிய சித்த மருத்துவ முறை — தானே அழியாது காக்கப்படவும், வளரவும், அதனுடன் இந்திய மருத்துவ முறைகளான ஆயுர் வேதமும், யூனானியும் பலராலும் கற்கப்படவும் ஏதுவாக — இந்திய மருத்துவக் கல்லூரியைச் சென்னையில் தொடங்கிய பெருமை —முதலமைச்சராக விளங்கிய — நீதிக் கட்சித் தலைவர் பனகல் அரசரையேச் சாரும்.

சென்னை மாநிலத்தில் விளங்கிய அற நிலையங்கள் பல ஒழுங்கான நிர்வாகம் இன்றிப் பல்வேறு குறைகளுக்கு ஆளாகி இருப்பதைக் கண்டு, அந்த நிர்வாகங்களைக் கண்காணிக்கவும் பொது நலத்துக்கு அவை பயன்படவும் வழி செய்வதற்கென 'இந்து அற நிலையக் காப்புக் கழகம்' ஏற்படுத்தும் சட்டம் நிறைவேற்றிய பெருமையும் நீதிக் கட்சிக்கு உண்டு.

நீதிக் கட்சி — செல்வாக்குப் பெற்று விளங்கிய நாட்களில்தான், இன்று புகழுடன் விளங்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், ஆந்திரப் பல்கலைக் கழகமும் தோற்றுவிக்கப்பட்டன.

(26-ம் பக்கம் பார்க்க)

**கழகம் தோன்றிய வெள்ளிவிழாவோடு முப்பெரும் விழா எடுக்கும் இந்த நேரத்தில்...**



தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாள் விழாவைப்பற்றி எழுத கடமைப் பட்டுளேன்.

பெரியார் அவர்களுக்கு அரசியல் எழுச்சியைவிட சமுதாயத்தின் மறுமலர்ச்சியை உருவாக்குவதுதான் உற்சாகமிகுந்த பொதுப்பணியாகும்.

தந்தை பெரியார் அவர்களின் சிறந்த தொண்டினை ஆராய்ந்து பார்த்தால் எனது கருத்து நன்கு புரியும். அவ்வாறு தனது பொதுப்பணியை வகுத்துக் கொண்டவர் அவர். அவரது பெருமுயற்சியால் தமிழர் சமுதாயத்திற்கு கிடைத்துள்ள பலன் தனிச்சிறப்புடையதாகும்.

தந்தை பெரியார் அவர்கள் ஏற்றுக்கொண்ட பணிகளில் பெரும்பாலும் நிறைவேறி வருகிறது. அதற்கு அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியை அளவுவிட்டுக் கூற முடியாததாகும். பார்ப்பனர் அல்லாத மக்கள் தங்களுடைய நிலைக் கேற்ப உத்தியோகங்களிலும் கல்வித் துறையிலும் இடம் பெறவேண்டும் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கையாக அமையப் பெற்று-அவைகளில் சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

## பெரியாரின் சிக்கனம்

தந்தை பெரியார் அவர்களுடைய சிக்கனத்தைப் பற்றி சிலர் கேலி பேசுவதுண்டு. ஆனால் அவரது தொண்டின் பலனாக மிக உயர்ந்த பதவிகளைக்கூட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் வழங்குதல் வேண்டும் என்பது அவரது ஆணித்தரமான கொள்கையாகும்.

அதில் கூடுமான அளவு வெற்றியும் பெற்றார். இவ்வளவு தூய்மையாகப் பாடுபட்டு சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்த மக்கள்—தாங்கள் பெற்றுள்ள பலனுக்கு நன்றி நினைக்காவிட்டாலும் பெரியாரின் முயற்சியைக் கேலி செய்யாமலாவது இருந்திருக்கலாம்.

தந்தை பெரியார் அவர்கள் சில நேரங்களில் தனது பொது வாழ்வைப் பற்றிய பிரச்சினைகளில் தளர்ச்சியடைவதுண்டு, எந்த மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபடுகிறோமோ, அந்த மக்களே இன்னும் விழிப்படையவில்லையே என்ற காரணத்தால்தான் பெரியாருக்குச் சலிப்பு ஏற்படும். ஆனால் சமுதாயத்தின் அடிப்படையில் உள்ள மக்கள் மட்டுமல்லாமல், வாழ்க்கைத் தரத்தில் இன்னும் மேலோங்காமல் உள்ள மக்களைப்பற்றி அவர் சிந்திக்கும்பொழுது மீண்டும் உற்சாகத்தோடு பணியாற்ற முனைவார்.

சட்டமோ அல்லது மதமோ மக்களுக்கு நல்வாழ்வு தரக்கூடியதாக இருக்கவேண்டுமே தவிர—மதத்திற்காக மக்கள் பலியாகக்கூடாது என்பதில் திட்டவட்டமாக எண்ணத்தை அவ்வப்போது எடுத்துக் கூறுவார் அவர்.

## புரியாதவர் பேச்சு!

தன்னை ஒரு அரசியல்வாதி என்று மற்றவர்கள் கூறுவதைவிடத் தன்னை ஒரு சீர்திருத்தவாதி என்று அழைப்பதையே உற்சாகமாக வரவேற்பார்.

அரசியலில் தாங்கள் நிபுணர்கள் என்று எண்ணுபவர்கள் கூட பெரியாரின் பொதுத் தொண்டில் குற்றம் குறை சொல்ல முடியாது.

தன்பான இயக்கத்தை நடத்தும்பொழுது அவர்கள் தனிச் சிறப்போடு விளங்குவார். ஆனால் பல்வேறு அரசியல் வாதிகளுடன் தொடர்பும் நட்பும் கொண்டிருந்தாலும் கொள்கையைச் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் தமது பணிகளைத் தொடர்ந்து செய்துவந்தார்.

மற்றும் சிலர் தந்தை பெரியார் அவர்களைப் பற்றி ஒத்தலாகப் பேசுவார்கள். அதாவது எந்த அரசாங்கம் அமைந்தாலும் அந்த அரசாங்கத்தை அவர் தீவிரமாக ஆதரித்தது உண்டு. ஏன் அவ்வாறு ஆதரிக்கிறார் என்பதை சரிவர புரிந்துகொள்ளாமல் குற்றம் சாட்டுவது உண்டு. அதற்காக பெரியார் சிறிதும் தளர்ந்ததில்லை. நம்பிக்கையும் இழந்ததில்லை.

## சீர்திருத்தக் கருத்துக்கள்!

அதற்கு அவர் சொல்லும் காரணம் உண்மையிலேயே இந்த நாட்டு மக்கள் மூடப் பழக்க வழக்கங்களிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விரைவில் விடுதலை பெறவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுள்ள பெரியார் அவர்கள் அரசாங்கத்தின் நியாயமான செயல்களை ஆதரிப்பதில் தவறில்லையே. அந்தக் காரணத்திற்காகவே அவர் அவ்வப்போது அமையும் அரசாங்கத்தை ஆதரித்து வந்ததுண்டு. அதன் காரணமாகவே சுயமரியாதை இயக்கத்தின் சில கொள்கைகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

தம்முடைய சீர்திருத்தக் கொள்கையை எப்பொழுதும் அவர்கள் விட்டுக் கொடுத்ததில்லை. அவசியப்பட்டால்



அண்ணா எழுதிய "ஆரிய மாயை" மீது வழக்கு. அதே நேரத்தில் "பெரியாரின் பொன்மொழிகள்" நூலுக்காக தந்தை பெரியார் மீதும் வழக்கு.

ஒரே சமயத்தில் இந்த இரண்டு வழக்குகளையும் திருச்சி கோர்ட்டிலே விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து முன்னேற்றக் கழகம் பேரியக்கமாகத் தழைப்பதற்கு விழுதுகள் விட்டிருந்த நேரம்.

தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் ஒரே வேனில் ஏற்றிக் கோர்ட்டுக்குக் கொண்டு செல்கிறார்கள்.

எதிரும் புதிருமாக அண்ணாவும் பெரியாரும் வீற்றிருக்கிறார்கள்—போலீஸ் வண்டிக்குள்.

இருவரும் பேசவில்லை.

பிரிந்துபோன அண்ணாவைப்பற்றி, 'கண்ணீர்த் துளிகள்' என்றும், மற்றும் கடுமையாகவும் தந்தை பெரியார் விமர்சித்துக் கொண்டிருந்தார். என்பதெல்லாம் அண்ணாவின் மனதைத் தொடவில்லை. பெரியார் ஒரு வார்த்தையாவது பேசுவாரா என்று பார்த்துக்கொண்டேயிருந்தார் அண்ணா.

பேசவில்லை.

கோர்ட்டுக்கு வந்ததும் ஒன்றன்பின் ஒன்றாக இருவர் வழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்ப்புச் சொல்லப்பட்டன.

ஆரியமாயை வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. தந்தை பெரியார் மீது பதியப்பட்ட வழக்கில் அவருக்கு ஆறுமாதம் சிறை தண்டனை விதிக்கப் பட்டது.


அப்போது திராவிட நாடு பொங்கல் மலர் அச்சாகிக் கொண்டிருந்த நேரம். மறுநாள் மலர் வெளியாக வேண்டும். அந்தப் பரபரப்புக்கிடையே அண்ணா தமது தோழர்களை அழைத்து மலரில் ஒரு பக்கத்தை எடுத்துவிட்டு தந்தை பெரியாரின் படத்தைப் போட்டு "கூண்டுக்குள் சிங்கம்" எனும் தலைப்பில் ஒரு பெட்டிச் செய்தியை இடம்பெறச் செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

கூண்டுக்குள் சிங்கமாக—சிறை தண்டனைக்கு ஆளான—தந்தை பெரியாரின் படத்தோடுதான் அந்தப் பொங்கல் மலர் மறுநாள் வெளிவந்தது.

—ஏ. எஸ். வேணு



# பெரியார் வகுத்த பாதையில்...



அமைச்சர் என். வி. நடராசன்

தாட்சண்யத்திற்காகச் சற்றும் தாமதம் காட்டுவாரே யன்றி கொள்கையைச் சிறிதும் விட்டுக் கொடுக்கமாட்டார்.

எனவேதான் அரசியல் பணியில் தந்தை பெரியார் அவர்கள் தீவிர அக்கறை காட்டியதில்லை. அதற்கு நேர்மாறாக சமுதாயப் பணியையே விரிவாகச் செய்து வந்தார்.

தந்தை பெரியார் அவர்களோடு நான் பல ஆண்டுகள் பணியாற்றி இருந்தாலும், ஏறத்தாழ 10 ஆண்டுகள் அவருடனே இருந்து செயலாளராக பணியாற்றும் வாய்ப்பினை பேரறிஞர் அண்ணா அவர்களின் மூலமாகப் பெற்றிருந்தேன். அந்தக் காலகட்டத்தில் மறைந்த அருமைத் தோழர் எஸ். குருசாமி அவர்கள் விடுதலை நாளிதழின் ஆசிரியராக இருந்தார். அந்நிலையில் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராகவும், விடுதலை ஆசிரியராகவும் பணியாற்றி வந்தார்.

## குருசாமி மீது சீற்றம்!

ஒருமுறை அவர் ராஜாஜி அவர்களை கண்டித்து தலையங்கம் எழுதியிருந்தார். வெளியூரில் இருந்த தந்தை பெரியார் அவர்கள் அத்தலையங்கத்தைப் படித்த உடனே குருசாமி அவர்களுக்கு என்னை மடல் தீட்டச் சொன்னார்கள். அடுத்த இரண்டு நாள் பொறுத்து தந்தை பெரியார் அவர்கள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை வந்தார்கள்.

உடனே தோழர் குருசாமியை அழைத்து நான்கு நாட்களுக்கு முன்னால் எழுதிய தலையங்கம் யாருடைய உத்தரவு மீது எழுதினாய். உனது தலையங்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. எனவே உன்னை வேலையில் இருந்து விலக்கி விட்டேன். போய் வரலாம் என்று கடுமையாகப் பேசினார்.

மறைந்த நண்பர் குருசாமி அவர்கள் சிரித்துக்கொண்டே நின்றார். பெரியாருக்கு இன்னும் கோபம் வந்துவிட்டது. தந்தை பெரியார் ஆங்கிலத்தில்

"I am not Joking".

என்று மிகவும் கடுமையாகச் சொன்னார். அந்த நேரத்தில் நானும் திராவிடர் கழகத்தினுடைய பொருளாளராக இருந்த நண்பர் கே. கோவிந்தசாமி அவர்களும் இருந்தோம்.

உடனே நாங்கள் இருவரும் ஐயா, குருசாமி அவர்கள் தங்களுக்கு மீறிய செயலில் ஈடுபட்டார் என்று கருதினால் தாங்கள் கருதினால்—தயவு செய்து அதை மறந்துவிட வேண்டுகிறோம் என்று கேட்டுக் கொண்டோம். அது மட்டுமல்ல, நான் தந்தை பெரியார் அவர்களுடன் சுற்றுப் பயணத்தில் இருந்த காரணத்தால் அடிக்கடி இதை எடுத்துக் கூறி பொறுத்தருள கேட்டுக் கொண்டிருந்தேன். உடனே அவர் தட்டுத் தடங்கலின்றி சொன்னார்; ''நீங்களும் அவரைப் போல் வெளியே செல்ல வேண்டிய நிலை ஏற்படும்'' என்று.

பிறகு, கோபம் தணிந்ததும் தந்தை பெரியார் அவர்களிடம் மீண்டும் வேண்டினோம். அப்போது பெரியார் சொன்னார்:

## ராஜாஜியை ஆதரித்தது ஏன்?

''எனக்காக தனிப்பட்டு நான் ராஜாஜியை ஆதரிக்கவில்லை. மனித சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகவே அவரை ஆதரித்து வருகிறேன். தமிழ்ச் சமுதாயத்தில் தனக்கு ஒரு பதவியும் வாழ்வும் கிடைத்து விட்டால் அதுபோதும் என்ற அளவோடு மிகப் பெரிய பொறுப்பில் இருக்கும் தலைவர்கள் கருத்துத் தெரிவித்ததுண்டு.

ஆனால் ராஜாஜி அவர்கள் தமது பெரிய பொறுப்பை ஏற்ற உடன் தனக்காக இல்லாமல் தன்னுடைய சமூகத்திற்காக பாடுபட்டார். அது மட்டுமல்ல; அவருக்கு அடுத்தபடியான தலைவர்களும் ராஜாஜிக்கு துணையாக நின்றார்கள்.

ஆனால் பார்ப்பனர் அல்லாத தலைவர்கள் அந்த உணர்ச்சியோடு பணியாற்றுவதில்லை. மாறாக என்னையும் இயக்கத்தையும் கேலி பேசினர் என்று தந்தை பெரியார் அவர்கள் கூறுவார்.

## சொந்த வாழ்வுக்கு அல்ல!

ராஜாஜியின் கொள்கை சரியோ—தவறோ தன்னுடைய வகுப்பு மக்களுக்குத் தொண்டு செய்வதில் தீவிரமாக இருந்தார்கள். ஆக ராஜாஜி அவர்களை நான் ஆதரிப்பது என்பது என்னுடைய சமுதாயக் கொள்கைகளை நாடெங்கும் எடுத்துக் கூறுவதற்காகவே தவிர என் சொந்த வாழ்விற்காக அல்ல — என்று வெளிப்படையாகவே பேசி வந்தார். ஆக அவருக்கும் தந்தை பெரியார் அவர்களுக்கும் கொள்கை வேறுபாடுகளிருந்தாலும், அதற்காக பாடுபடுவதில் போட்டி போட்டுக்கொண்டுதானிருந்தார்.

எனவே இனியாகிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தொண்டு செய்வதில் நாம் தீவிர அக்கறை காட்ட வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் அறிவுரை கூறுவார்கள். தந்தை பெரியார் அவர்களின் வழியில் பேரறிஞர் அண்ணா அவர்களும் நடைபோட்டு மக்களைத் தட்டி எழுப்பினர்.

இன்று நமது டாக்டர் கலைஞர் அவர்கள் பல்வேறு தொல்லைகளுக்கிடையே நன்முறையில் நாட்டை ஆண்டு வருகிறார் என்றால் அதற்கு காரணம் தந்தை பெரியாருடன் பொதுப்பணியிலே தொடர்பு கொண்டிருந்ததே ஆகும்.

## ஒரு குலமே!

அதேபோலவே பொதுச் செயலாளர் நாவலர் அவர்களும் நானும் மற்ற தலைவர்களும் பல்லாயிரக்கணக்கான செயல்வீரர்களும் தந்தை பெரியார் அவர்களுடன் பொதுப்பணியில் தொடர்பு கொண்டிருந்ததே ஆகும்.

எனவே நம்மையெல்லாம் பொதுப்பணிக்கு ஆளாக்கி விட்ட தந்தை பெரியார் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் நாம் என்றென்றும் கடமைப் பட்டவர்களாவோம்.

அந்தக் கடமை உணர்ச்சி சிறிதும் மங்காமல் காத்து சமுதாயத்தில் மிகவும் பின் தங்கியுள்ள மக்களுக்குத் தொடர்ந்து பணியாற்றி நிரந்தரமான நல்வாழ்வைப் பெறுவதற்கு இந்த நூற்றாண்டு விழாவில் உறுதி கொண்டு பணியாற்றுவோமாக!

## குண்டுக்குள் சிங்கம்



## விடுதலையில் வெளியான நாடக விமர்சனம்

அந்த நாளில் நாடகமேடையில் சீர்திருத்தக் கருத்துக்களை வழங்கிய நாடகம்—குமாஸ்தாவின் பெண். டி. கே. எஸ். சகோதரர்களின் நடிப்பையும், நாடகக் கதையின் கருவையும் பாராட்டி அண்ணா விடுதலை நாளேட்டில் ஒரு சிறப்பான விமர்சனம் எழுதினார்.

இந்த விமர்சனம் வெளியாகும்போது, பெரியார் அவர்கள் ஊரில் இல்லை. வெளியூரிலிருந்து விமர்சனத்தைப் படித்துவிட்டு வேகம் வேகமாக ஈரோடு திரும்பினார் அவர்.

''என்னங்க அண்ணாதுரை? அது என்னத்துக்குங்க... அவ்வளவு இடத்தை வீண் பண்ணினீங்க? நாடக விமர்சனம் அது இது எல்லாம் எதுக்குங்க?'' என்று கேட்டார் பெரியார்.

உடனே அண்ணா அவர்கள் அமைதியாகப் பதில் சொன்னார்:

பெண்ணுரிமை, சமூக சீர்திருத்தம் ஆகிய கழகத்தின் கருத்துகளை குமாஸ்தாவின் பெண் போதிக்கிறது என்றும், ஆயிரம் மேடைகளில் நாம் நடத்துகிற பிரச்சார பலத்தை ஒரு நாடகம் உணர்த்துகிறது என்றும் விளக்கினார் அண்ணா. பெரியாரிடம் அவர் விளக்கிச் சொன்னதும், பெரியார் கண்கள் அகல—''அப்படீங்களா? ஐம்பது தடவை இந்த நாடகம் நடந்திருந்தா... நம்ம கருத்துக்களை ஐம்பதாயிரம் மேடை போட்டுச் சொன்னதுக்குச் சமங்க. அந்த டி. கே. எஸ். சகோதரர்களை முதலிலே நம்ம வீட்டுக்கே அழைச்சு ஒரு நாளைக்குப் பாராட்டி விருந்து போடுவோமுங்க! அதுதான் சரியான மரியாதை!'' என்று உணர்ச்சிவசத்தோடு கூறினார் பெரியார்.


—அ. சங்கரய்யா

# வேலூர் மைய கூட்டுறவு வங்கி (அளவிடப்பட்டது)

எண் 1, தோரப்பாடி ரோடு        வேலூர்—632001 (வ. ஆ. ட.)
தொலைபேசி எண் 52, 524, 1524        தந்தி; 'கோபங்'

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரு 1.51 கோடி
எமது மொத்தக் கிளைகள்: 34

## வங்கியின் வளர்ச்சி





பங்குத் தொகை
மாநில வங்கியிலிருந்து பெற்ற கடன் நிலுவை
வைப்பு நிதி நிலுவை
கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கிய கடன் நிலுவை
[இலக்கங்கள் இலட்சங்களில்]


R. செல்வின், B.Sc., B.Com.,
செயலர்

K. நடராசன், B.Com.,
தலைமை நிர்வாக அதிகாரி

முல்லை பொ வடிவேல்
பெருந்தலைவர்

வேலம் தம்பிதாசன்
துணைப் பெருந்தலைவர்





தமிழ்ப்பகை தமிழ கத்தில்
தருக்கியே திரிந்த துண்டு;
தமிழினம் விழிக்கக் கண்டு
தாமாக அடங்கிப் போனார்!
தமிழர்போல் நடித்த கூட்டம்
தமிழ்ப்பண்பை அழிக்கப் பார்க்கும்;
தமிழரே! உறங்கி விட்டால்
தரைமட்ட மாவோம், காண்க!

தந்தையாம் பெரியார் அன்று
தன்மான முழக்க மிட்டு
வந்திரா விட்டால் என்றோ
வாழ்விழந் திருப்போம்! நம்மைப்
பந்தாடிக் கடலுக் குள்ளே
பழைமைநாள் சிதைத்தி ருப்பார்!
விந்தையாய் வெறுப்புடைக் கொன்று
விதைத்திட்டார்; மரமாய் ஆனோம்!

அண்ணாவின் வருகைக்குப்பின்
அறிவிலே புரட்சி தோன்ற
எண்ணாதார், நம்மைப் பற்றி
ஏளனம் பேசி யோர்கள்;
நண்ணினார் நம்மி டத்தில்;
நாட்டிலே புதுமை கண்டோம்!
மண்ணாளும் கட்சி யாக
மாற்றினார் தமிழ்ப்பண் பாளர்!

பிழைக்காது கழகம் என்று
பெரியாரால் இகழப் பட்டும்—
தழைக்கநாம் உருவாய் மாறிச்
சரித்திரம் படைத்துக் காட்டி
உழைக்காதோர் ஒதுக்கித் தள்ளி
ஓங்கிட விழாவெ டுத்தோம்!
அழைக்கிறோம்; அன்புத் தொண்டர்
அனைவரும் இணைக; வாழ்க!

முப்பெரும் விழா எடுக்க
முனைந்துள்ள தமிழ கத்தில்
எப்போதும் இல்லா வண்ணம்
இனிவுணர் வெழுந்திடக் கண்டோம்!
தப்பேதும் இல்லை; என்றும்
தனக்கு மிஞ்சித்தான் தானம்—
அப்போதும் விரும்பி னால்தான்
அளித்திட லாகும் தர்மம்!

# 25



# முப்பெரும் விழா

**கவிஞர் ஆனந்தம்**

# மாளிகை விருந்தென்றால் மறுப்பு!

நாவலர் அவர்கள் இளந்தாடி வேந்தராக இருந்த அந்த நாளில் கோவையில் ஜி. டி. நாயுடு வின் மாணவர் விடுதிக்கு கண்காணிப்பாளராக இருந்தார். கோவைக்கு வந்தால் அண்ணா நாவலர் அவர்களை விடுதிக்கு வந்து சந்திக்கத் தவறமாட்டார்.

ஒருநாள் அண்ணா வந்து விடுதியில் நாவல ரோடு பேசிக் கொண்டிருப்பது பற்றிய தகவல் கேட்டதும், ஜி. டி. நாயுடு 'கோபால்பாக்' மாளிகை யிலிருந்து விடுதிக்குப் போனார்.

தமது இல்லத்துக்கு வந்து விருந்து சாப்பிடு மாறு வேண்டினார் நாயுடு.

அண்ணாவுக்கு ஆரம்ப காலத்திலிருந்தே பணக் காரர்களின் மாளிகைகளைவிட அன்புத் தோழர் களின் இல்லங்கள்தான் விருப்பமானவை. ''கோவை க்கு வந்தவுடனே டைப்பிஸ்ட் சீனிவாசன் வீட்டிலே தங்குவதாக ஒப்புக்கொண்டுவிட்டேன். சீனிவாசன் எனக்காக ஏற்கனவே விருந்து ஏற்பாடுகளைத் தட புடலாகச் செய்திருக்கிறார். அதனால் அங்கேதான் இன்று எனக்கு உணவு,'' என்று அண்ணா நாயுடு வின் அழைப்பை மறுத்தார்.

''இன்னொரு நாளைக்குச் சீனிவாசன் வீட்டிலே சாப்பிடுங்கள். இன்று நம் வீட்டிலே சாப்பிடுங் கள்!'' என்று நாயுடு சொன்னார்.

''சீனிவாசன் ஏழை. விருந்துக்கு செலவு செய்துவிட்டார். அதைப்போய் வீணாக்கவேண் டாமே!'' என்று புன்னகை தவழக் கூறினார் அண்ணா.

* * *

மதிய உணவுக்கு அண்ணா நாவலர், சீனி வாசன் மற்றும் தோழர்கள் சிலரும் கோவையிலுள்ள பெங்களூர் பிரியாணி ஓட்டலுக்குள் நுழைந்து கொண்டிருந்தபோது அந்த வழியாகப் போன நாயுடு பார்த்துவிட்டார்.


அவரால் கண்டும் காணாததுமாகப் போக முடியவில்லை. நேராக பெங்களூர் பிரியாணி ஓட்ட லுக்குள் நுழைந்து அண்ணாவைப் பார்த்து இது குருசாமி நாடார் கடை ஆயிற்றே. சீனிவாசன் வீடு இது அல்லவே!'' என்று சிரித்தபடி கூறினார்.

அண்ணாவும் அந்தச் சிரிப்பைப் புரிந்து கொண்டு தமது வழக்கமான புன்னகையோடு— ''எனக்காக விருந்து என்று ஏற்பாடு செய்திருந் தார் சீனிவாசன். இத்தனை பேருக்கும் என்னால் தாங்காது என்று நேராக ஓட்டலுக்கே அவரோடு வந்துவிட்டோம்!'' எனச் சொல்லி ஒரு சமாளிப்பு சடாளித்துவிட்டார்.

அ. சங்கரய்யா

"காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்துள் மாணப் பெரிது!"

- என்ற
வள்ளுவர் வாக்கின்படி
நலிவு கண்ட "டெக்ஸ்டூலுக்கு"
பொலிவு பெற
வாய்ப்பளித்த
அறிஞர் அண்ணாவின்
தலைமையில் இயங்கிய
தமிழக அரசு செய்துவரும்
பேருதவியை மனதிற் கொண்டு
அன்னாரை இந்த நன்னாளில்
நினைவு கூர்கிறோம்.

# TEXTOOL

PIONEERS IN MANUFACTURE
OF TEXTILE MACHINERY
NOW OFFER
QUALITY MACHINERY
ON
ASSURED DELIVERY
AT
ECONOMIC PRICES

- RING SPINNING FRAMES - HIGH SPEED NARROW WIDTH & CONVENTIONAL
- WET OR DRY RING DOUBLING FRAMES 6A & 6AS
- TEXTOOL - KAMITSU R. T. CONE WINDER
- TEXTOOL - KAMITSU D. R. T. DOUBLER WINDER

**TEXTOOL CO. LTD.**
COIMBATORE-6 S. INDIA


TXT2/71







பாசமிகு
அண்ணாவின்
பல்வகைப்
புன்னகை
அழகேசன்—



இதயங்களை அழவைத்த
இறுதிப் புன்னகை
அழகேசன்—





சிங்கப்பூர் பிரதமர்
லீயுடன்
பேரறிஞர் அண்ணாவும்
இரா.செழியனும





# மலேசிய நாட்டில் அண்ணாவைக் கண்ட தமிழ் உள்ளங்கள்!

— மு. கணபதி

**1965** ஆம் வருடம் பிப்ரவரி 18ஆம் தேதி. காலையில் என் நண்பர் ஒருவர் வந்தார். இரவு தன் வீட்டுக்கு வரவேண்டும் என்றார்.

''என்ன சேதி?'' என்றேன்.

''சொந்தக்காரர்களை எல்லாம் அழைச்சிருக்கேன். ஒரு ஆடு அடிச்சு விருந்து வைச்சிருக்கேன். நீங்களும் வரணும்!'' என்றார் அவர்.

''சேதியைச் சொல்லாமல் நான் வருவது எப்படி?'

''தமிழ் நாட்டிலே முதலமைச்சரா இருந்த அண்ணா அவுங்க இறந்து இன்னையோட பதினைஞ்சு நாளாகுதே. அவருக்கு கருமாதி செய்யறோம். எங்கே நாம் இருந்தாலும் நம்மோட குடும்பத்திலே பிறவாத ஒரு அண்ணனோட சாவு ஆச்சே!'

அவர் கண்கள் துளிர்த்தன.

அப்படியே புல்லரித்துப் போய்விட்டது எனக்கு!

ஃ ஃ ஃ

பிப்ரவரி 4ஆம் தேதியன்று ஈபோ நகராட்சித் தலைவர் எஸ். பி. சீனிவாசன், நகரசபை சார்பில் நடந்த இரங்கல் கூட்டத்தில் பேசியது நினைவைத் தொட்டது.

''இந்த நேரத்தில் அண்ணா அவர்களுடைய சவ ஊர்வலம் தமிழ்நாட்டுத் தலைநகரிலே மிதந்து கொண்டிருக்கும். நகரும் மக்கள் சமுத்திரம் படகுபோல் அண்ணாவை ஏந்தி நகராத வங்கக் கடல்கரையில் சேர்க்கும்! இன்னும் சில மணி நேரத்தில் அவருடைய உடலைப் பூமிக்குள்ளே இறக்கி வைப்பார்கள்.

''தம்முடைய உடலால் அவர் பூமிக்குள்ளே மறைந்து போனாலும், அவர் தமிழர்களுடைய இதயங்களிலே — உண்டாக்கிவிட்டுப் போன அந்தப் புது உணர்ச்சி என்றைக்கும் நம்மை விட்டு மறைய ஏலாது!''

மலேசிய நாட்டிலே பிறந்து வளர்ந்த இலங்கைத் தமிழரான எஸ். பி. அவர்கள் கண்கள் பனிக்கப் பேசிக் கொண்டிருந்தபோது – தமிழகத்தோடு தொடர்பே இல்லாமல்போன எண்ணற்ற தமிழர்களும், என்போன்று அண்ணா என்கிற பல்கலைக் கழகத்தின் மூலம் பரவிய கருத்துக்களால் உலக அறிவடைந்த இளைஞர்களும் அந்த இரங்கல் கூட்டத்தில் ''அண்ணா... அண்ணா!'' – என்று கதறியழுது கொண்டிருந்தோம்.

தொடர்ந்து சிலர் அந்த இரங்கல் கூட்டத்தில் பேச முன் வருவதும், நாலு வார்த்தை பேசுவதற்குள்ளாகவே நாக்கு உலர்ந்து தடுமாறி, தம்முடைய சொந்த உடன் பிறப்பு ஒருவரை இழந்துவிட்ட துக்கம் என —வெடித்து, விம்மியழுது விட்டுப் போவதுமாக ஒரே அழுகையும், முனகலும் அந்த மேடையை நனைத்த நிகழ்ச்சிகள் என் நெஞ்சை அப்போது நெருட ஆரம்பித்தன.

ஃ ஃ ஃ

அண்ணாவைப் பற்றி எங்களுக்கெல்லாம் தமிழகத்திலிருந்து வருகிற ஏடுகள் மூலம் அறிந்த பரிச்சயம் தான்.

அண்ணாவின் புகைப்படங்கள், அவர் எழுதி வந்த கட்டுரைகள், பேச்சுக்கோவைகள் எல்லாம் எங்களில் சிலருக்கு மட்டுமே நெருக்கமாக இருந்தன.

மலேசியாவின் மூன்றாவது பெரிய நகரமான ஈபோவிலும், அதனைச் சுற்றியுள்ள ரப்பர் தோட்டங்களிலும், பத்து கெஜா போன்ற ஈயச் சுரங்கங்களிலும் பணியாற்றும் தொண்ணூறு சதவீதத் தொழிலாளர்களுடைய நெஞ்சத்திலே ''அண்ணா'' பீடமமைத்துக் குடியிருந்த ஒரு தெய்வம்!

அண்ணா ஒரு அரசியல்வாதி; அறிஞர்; எழுத்தாளர், பேச்சாளர்; தமிழினத்தைத் தட்டி எழுப்பிய சீர்திருத்தவாதி — இவையெல்லாம் மலேசிய நாட்டிலுள்ள இந்தியர்களில் — குறிப்பாகத் தமிழர்களில் — 90 சதவிகிதம் பேருக்குப் பரிச்சயமே இல்லாதவை.

அப்படியானால் அவர்களுடைய உள்ளங்களில் அண்ணா ஆராதிக்கப்பட்டது எவ்வாறு?

ஆறாவது வகுப்புக்குமேல் தமிழ்ப் படிப்பு படிக்க இயலாத தமிழர்களின் உள்ளத்திலெல்லாம் அண்ணா அவர்களைப் பற்றி ஒரு ''படிமம்'' எப்படி இத்தனை பூரிப்போடு நிகழ்ந்தது?

ஃ ஃ ஃ

யோசிக்கிறேன். 1965ஆம் ஆண்டு நடந்த சம்பவங்கள் என் மனதில் வருகின்றன.

இந்திய நாடாளு மன்றத்திலே உறுப்பினர்களான அண்ணா அவர்களும், இரா. செழியன் அவர்களும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தங்கள் பயணத்தை முடித்துக் கொண்டு மலேசிய நாட்டுக்கு வருகிறார்கள்.

சிங்கப்பூர் அப்போது மலேசியக் கூட்டாட்சியில் இணைந்திருந்த நேரம்.

சிங்கப்பூரிலுள்ள தமிழர்களின் அமைப்புகள் மலேசிய சிங்கப்பூரில் அண்ணாவும் செழியனும் கலந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகளையெல்லாம் தங்கள் பொறுப்பிலேயே வைத்துக் கொண்டார்கள்.

அண்ணா வருகிறார் என்ற செய்தி அறிந்ததுமே மலேசியாவிலுள்ள நாங்களெல்லாம் அங்கிருந்த தமிழர்கள் ஐக்கியச் சங்கம், தமிழ் இலக்கிய மணி மன்றம் மற்றும் தமிழர்கள் நடத்தும் அமைப்புகள் அனைத்தின் பிரதிநிதித்வத்தோடும் ஒவ்வொரு அமைப்பிலும் இரண்டு பேராளர்கள் வீதம் கூட்டி ஈபோவில் விழா எடுக்க முடிவு செய்துவிட்டோம்.

கோலாகலமான ஏற்பாடுகள்! அண்ணாவை அறிந்த உள்ளங்கள் அனைத்தும் தங்கள் ஆராதனை தெய்வத்தை நேரில் காணக் கூடுவது போல் தங்கள் தங்கள் அன்புக் காணிக்கைகளை எல்லாம் ஏந்தியவாறு காத்திருக்கிறோம்.

இந்திய நாட்டிலிருந்து எவர் வந்தாலும் கட்சி மாச்சரியங்களையெல்லாம் கடந்து தமிழர்கள் ஒன்று கூடுவது வளமை. அப்படி இருக்க — அண்ணா போன்ற மாபெரும் தலைவர்கள் அரிதாக வரும்போது வாளா இருக்க முடியுமா?

வெள்ளித் தாம்பாளம் ஒன்று வாங்கி அதன் நடுவே வெட்டி எடுத்து தங்கத் தகடு பதித்து அண்ணாவுக்கு வாழ்த்துப் பா எழுதி காத்திருந்தவர்கள் பலர். அண்ணாவின் திருவுருவத்தைப் படத்தில் கண்டது போல் பட்டு ஜமக்காளத்திலே நெய்து காணிக்கை செலுத்தக் காத்திருந்தவர்கள்! ஊனமுற்றவர்கள்; தொழிலாளர்கள்; சீனர் புகுந்து கொண்டதால் ரப்பர்தோட்டத் தொழிலில் தமிழர்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டத்துக்கிடையேயும் வயிற்றை வாயைக் கட்டி— ஒரு தமிழன், தன் தலைவனுக்குச் செலுத்த வேண்டிய அன்பைச் செலுத்தத் தயாராக இருந்தவர்கள் — இப்படி எல்லோருடைய உள்ளத்திலும் அண்ணாவை ஈபோவில் வரவேற்கும் ஆவல் நொடிக்கு நொடி வளர்ந்து நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற வேளையில், நாங்கள் திடீரென ஏமாற்றத்துக்கு ஆளானோம்.

சிங்கப்பூரிலிருந்த தமிழர் அமைப்புகள் — ஏதோ காரணம் கூறி ஈபோவுக்கு குறிப்பிட்ட நாளில் அண்ணாவைக் கலந்துகொள்ள இயலாது செய்துவிட்டார்கள்.

ஒரு தமிழன் — தன் தலைவனை வரவேற்க இயலாத நிலைமை உண்டாகுமானால் உணர்ச்சி வெள்ளம் எப்படி அலைமோதும் என்பதைத் தான் அன்று நாங்கள் உணர்ந்தோம்.

''அண்ணா ஈபோவுக்கு வராவிட்டால் நான் தீக்குளிப்பேன்!'' என்று சிலர் கொதித்தார்கள்.

பொது நிகழ்ச்சியில் அண்ணாவைக் கலந்து கொள்ளச் செய்வது என்பது கொஞ்சம் யோசனைக்குரியது என சிங்கப்பூர் தமிழர் நிறுவனங்கள் நினைத்திருந்த அந்த நினைப்பைத் தவிர்த்திடவும், எப்படியாவது அண்ணாவை ஈபோவுக்கு வருகை புரியச் செய்ய வேண்டும் என்ற ஆவலிலும் — ஈபோ நகரசபை சார்பிலேயே ஒரு வரவேற்புகு அதிகாரபூர்வமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

அதற்கு முன்னதாக — அண்ணா கலந்து கொள்ள இயலாது என்கிற சேதி







கிடைத்தபோதே ஈபோ நகரத்துத் தமிழர்களுக்குக் கோலாலம்பூரிலிருந்து பினுங்குக்கு அண்ணா ஈபோ வழியாகச் செல்கிறார் என்ற தகவல் எட்டியதும், அத்தனை பேரும் ஈபோ விமான நிலையத்தை ஒரு திருவிழா மைதானமாக்கிவிட்டார்கள்.

அங்கு விமானப் பயணம் மேற்கொள்ள வந்த மலேசிய சமஷ்டி அமைச்சர் ஒருவர், என்ன— இவ்வளவு கூட்டம் என்று வியந்திருக்கிறார்.

''அண்ணாவும், செழியனும் வருகிறார்கள்!''

''அவர்கள் யார்?''

''இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள்.''

''பார்லிமெண்ட் உறுப்பினர்களைப் பார்க்கவா இவ்வளவு கூட்டம்! அப்படியானால் அமைச்சர் சம்பந்தத்தைப் பார்க்க இவ்வளவு பேர் வருவதில்லையே!''

''அமைச்சர் சம்பந்தம் இந்த கூட்டாட்சியில் அடிக்கடி காணக்கூடியவர். ஆனால் அண்ணா எங்கெல்லாம் தமிழர் சமுதாயம் இருக்கிறதோ — அவர்தம் உள்ளத்திலெல்லாம் தமிழ் உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய தலைவர்!''

பளிச்சென்று பதில்கள் பறந்ததும், அந்த அமைச்சர் வாய்மூடி இருந்துவிட்டார்.

ஃ ஃ ஃ

கோலாலம்பூர் செல்லும் விமானம் வந்து நிலந் தொட்டுவிட்டது.

''அண்ணா! அண்ணா!'' என்று விமான நிலைய மைதானத்தில் தமிழர்களின் உள்ளங்கள் கூவுகின்றன! தமிழர்கள் மட்டுமல்ல; தமிழர்களை ஒரு தினுசாகப் பார்த்தவர்களின் உள்ளங்களிலும் மோதி இந்தஒலி எதிரொலித்துக்கொண்டிருக்கிறது.

''ஒரு ஐந்து நிமிடம் இங்கே இறங்க வேண்டும் அண்ணா!'' என்று ஈபோ நகர மக்கள் சார்பில் ஜேவியர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார். மக்கள் வெள்ளம் விமான மைதானத்தில் ஒரு கரை அமைத்துக் கொண்டு 'அண்ணா அண்ணா' என்ற அலைஒலியை எழுப்பிக் கொண்டிருக்கிறது.

சிங்கப்பூர் தமிழர் அமைப்புகளின் பொறுப்பில் அழைக்கப்பட்ட விருந்தாளியாக மலேசிய – சிங்கப்பூர் நாட்டுக்கு வந்த அண்ணா அவர்களுக்கு ஒரு சங்கடமான நிலைமை.

ஈபோ நகர மக்களின் உணர்ச்சிக் கடலிடையே அண்ணா அகப்படக்கூடாது என்று சிங்கப்பூர் தமிழர் அமைப்புகள் எண்ணியது ஏனென்று அண்ணாவாலும் அறிந்து கொள்ள இயலவில்லை.

அண்ணா புன்னகை பூத்தபடி கையை முன்னால் நீட்டி, ''அதோ அவரிடம் கேளுங்கள் தம்பி!'' என்று சேவியரிடம் கூறுகிறார்.

அண்ணா கை நீட்டியவர் சிங்கப்பூர் தமிழர் நிறுவனத்தைச் சேர்ந்தவரல்ல. மலேசிய சிங்கப்பூர் விமானத்தை இயக்கும் பைலட்!

சேவியருக்கு மகிழ்ச்சி!

அரசாங்க அதிகாரியாக இருந்த சேவியர் 'பைலட்'டை அணுகி — ''அண்ணாவை ஒரு ஐந்து நிமிடம் கீழே இறங்க வைத்துக் கொள்கிறோம் — அனுமதியுங்கள்!'' என்றார். ஏன் என்றால் கோலாலம்பூர் செல்லும்போதும், பினுங்கு செல்லும்போதும் ஈபோவில் ஐந்து நிமிடம் மட்டுமே விமானங்கள் ஒவ்வொன்றும் நிலந் தொட்டு நிற்பது வழக்கம்.

ஓடு பாதையில் சுழன்று வந்து விமானம் நிற்பதும், படி வண்டியைத் தள்ளிப் போய் பொருத்துவதும், பயணிகள் இறங்க வேண்டியதோ — ஏறவேண்டியதோ இருந்தால் இறங்கி ஏறுவதும் ஓரிரு நிமிடங்களில் பரபரப்பாக நடந்து முடிந்துவிடும். அப்படிப்பட்ட பரபரப்பான விமான நிலையத்தில் ஐந்து நிமிடத்துக்கு மேல் விமானத்தை நிறுத்த பைலட்டுக்கு விருப்பமிருக்காது என்பதாலேயே சேவியர் முறைப்படி தமது பொறுப்பில் அந்தக் கோரிக்கையைக் கேட்டார்.

ஆனால் பைலட், ''உங்கள் அண்ணா யார்?'' என்றார்.

''அதோ அவர்தான்! தமிழர்கள் அனைவருடைய அண்ணனும் அவரே!''

சேவியர் அண்ணாவைப் பெருமிதத்தோடு சுட்டிக் காட்டியதும், பைலட் தலையாட்டினார்.

''அவரை இறக்க நான் சம்மதிக்க மாட்டேன். அவரால் கோலாலம்பூரிலேயே எனக்கு பத்து நிமிடம் விமானம் தாமதம். அவர் இறங்கினால் மக்கள் அவரை ஏற விடமாட்டார்கள்!'' — என்று மறுத்தார்.

சேவியர் கெஞ்சினார். அப்படி எதுவும் தாமதம் ஏற்படாமல் தாம் பார்த்துக் கொள்வதாகக் கூறித் தமது பொறுப்பில் அண்ணாவை — வரவேற்பு மாலைகளைப் பெற்றுக்கொள்ள கூட்டத்தருகே அழைத்து வந்தார்.

ஒருசில நொடிதான்!

நுழைவாயிலை நெருங்குவதற்குள் அண்ணாவை அப்படியே தூக்கிக்கொண்டுபோய் விட்டார்கள்.

சேவியர் திணறி திக்குமுக்காடி அண்ணாவைக் கூட்டத்திடையேயிருந்து மீட்டு மறுபடியும் விமானத்திற்கு அழைத்துச் செல்வதற்குள்— மக்களின் உணர்ச்சிக்கரையை அடக்குவதற்குள் — போதும் போதுமென்றாகி விட்டது.

சிங்கப்பூர் தமிழர் அமைப்புகள் அண்ணாவை ஈபோவில் நடைபெறும் வரவேற்பில் பங்கு கொள்ளச் செய்யாதது இதனால்தானோ என்பது போல் — அத்தனை ஆர்வத்தையும், உணர்ச்சிகளையும் கொட்டி விட்டார்கள் ஈபோ மக்கள்!

ஃ ஃ ஃ

அண்ணாவை எங்களில் பலரும் அனுமானித்தது ஒரு படாடோபத் தலைவராகத்தான். ஆனால் எங்கள் பலருடைய அனுமானங்களையும் தூளாக்கிய எளிய கோலத்தோடு அண்ணாவை நாங்கள் பார்த்தபோது — பலருக்கு வியப்பு!

அண்ணா வருகை தந்தபோது சிங்கப்பூர் – மலேசிய நாடுகளில் தமிழர்களை மதிக்காத பத்திரிகைகள்கூட தமிழர்களைப் பற்றிய ஒரு உயர்வான எண்ணத்தோடு எழுதும் வகையிலும், தமிழர்களை ஒரு தினுசாகப் பார்த்தவர்கள் அந்த எண்ணத்தை அகற்றிக் கொள்ளும் வகையிலும் செய்து விட்டார் என்பதை நான் குறிப்பிட்டே ஆகவேண்டும். அங்குள்ள தமிழர்களைப் பற்றியும், இந்தியர்களைப் பற்றியும் — பத்திரிகைகள் அண்ணாவிடம் கேட்ட கேள்விகளுக்கு அண்ணா கூறிய பதில்கள் ஏனைய குடிமக்களுக்கு இளைத்தவர்கள் தமிழர்கள் அல்ல என்பதை வலியுறுத்தும் வகையில் அமைந்துவிட்டன!

இது கடல்கடந்த நாடுகளில் தமிழர்களுக்கு அண்ணா உருவாக்கிய ஒரு பெருமை என்னும் வகையில் எங்கள் நெஞ்சங்கள் பீடுடன் நிமிர்ந்திருப்பதை அண்ணா வந்து சென்ற பிறகு மலேய மக்களும், சீனர்களும் நேரடியாகவே கண்டனர்.

அண்ணாவுக்காக நாங்கள் அங்கு எந்தவிதக் கட்சி மாச்சரியமும் இல்லாமல் ஒருங்கிணைந்ததைப் போல் அதன்பின்னர் இன்னொரு மக்கள்சமுத்திரம் அங்கே கூடியதில்லை.

ஃ ஃ ஃ

ஈபோ நகராட்சியின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பில் நகராட்சித் தலைவர் 'எஸ். பி.' அவர்களும், அவரது தமையனார் வழக்கறிஞர். ஆர். சீனிவாசனும் ஆற்றிய உரைகள் — இன்னும் எங்கள் இதயங்களில் எதிரொலித்துக் கொண்டுதானிருக்கின்றன.

அண்ணன் மறைந்தபோதும் இந்த எதிரொலி மலேய நாட்டில் மோதியதுண்டு. எந்தத் தலைவருக்கும் காட்டாத துக்கத்தை மலேயாவில் வாழும் தமிழர்கள் காட்டினார்கள்.

நாங்களெல்லாம் அலுவலகங்களுக்கு கருப்பு பேட்ஜும், டையும் கட்டிக் கொண்டுபோன அந்த ஒரு வாரத்தில் ஒவ்வொருவர் இல்லத்திலும் ஒரு அண்ணாவை இழந்த துக்கம்போல் தமிழர்களின் முகங்கள் எல்லாமே சோகக் களை பரவியிருந்தது.

இரங்கல் கூட்டத்தின் போது வழக்கறிஞர் 'டி. ஆர்.' இல்லை. அண்ணா மறைவதற்கு முன்பே அவர் ஈபோ மக்களின் இதயங்களை ஏமாற்றிவிட்டுச்சென்று விட்டார். என்றாலும்—அந்த நகராட்சியின் தலைவராக வீற்றிருந்த 'எஸ்.பி.' அவர்கள் ஈபோவின் சார்பில் அண்ணாவுக்குச் செலுத்திய நன்றியுணர்ச்சியை மலேயா மட்டுமல்ல; தமிழர் வாழும் பிற நாடுகள் எதுவுமே மறந்திட இயலாது.

ஈபோவில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிக்கு அண்ணா சாலை என்றும், அந்தச் சாலை தொடங்கும் பாலத்திற்கு 'அண்ணா பாலம்' என்றும் ஈபோ நகராட்சி நன்றி செலுத்தியது பற்றி மலேயா தமிழர்கள் நெஞ்சு நிமிர்த்திப் பெருமை கொள்கிறார்கள்.

அந்தப் பெருமிதம் — எங்களுக்கு தமிழகத் தலைநகரில் அண்ணா பாலம் அமைவதற்கு முன்பே ஏற்படுத்தப்பட்ட பெருமிதமாகும். ஏனென்றால் சீனர்களும், மலேயா மக்களும் தமிழர்களைப் பற்றி எண்ணியிருந்த தாழ்வான எண்ணத்தை அகற்றி அவர்களை நெஞ்சில் ஓர் உயர்வான பீடத்தை தமிழர்களுக்(கு)
சிருஷ்டித்துக் கொடுத்த(வர்)
அண்ணா. அத்துடன்
இன மக்களுக்கும் ந...
தமிழர்களை மலேயாவி...
பாலமாகவும் இருக்கவை(த்து)
விட்டு வந்தவர் அண்...

ஃ ஃ ஃ

ஈபோ நகரில் நா...
தந்த வரவேற்பின் போ...
அண்ணாவுக்காகச் செலு...
காணிக்கைப் பொருட்க...
பரிசுப் பொருட்கள் —...
யும் அண்ணா தமிழக...
குக் கொண்டுவரவில்லை...
மேடையிலே மலே...
குவிந்திருந்த அத்த...
பொருட்களையும் மலே...
பல்கலைக் கழகத்தின் தமி...

## மரத்திலே கட்டிய மாலை!

அந்த நாளில் கூட்டங்களில் அண்ணா அவர்களுக்குப் போடும் மாலைகளைக் காஞ்சிபுரத்துக்குக் கொண்டுபோக அண்ணாவுடன் செல்லும் நண்பர்கள் விரும்புவதுண்டு. ஆனால் ஒரு ஊரில் கூட்டம் முடிந்ததுமே—மறு ஊருக்குப் போகவேண்டிய நிகழ்ச்சியும் தொடர்புடன் இருக்கும்.

அப்போதெல்லாம் ஒரு ஊரில் போட்ட மாலைகளை அடுத்த ஊருக்கு எப்படி எடுத்துப்போவது என்று அண்ணாவுடன் செல்லும் தோழர்கள் அந்த மாலைகளை என்ன செய்வதென்று தெரியாமல் விழிப்பார்கள்.

அப்போது அண்ணா புன்னகையுடன் ''மாலைகளைப் பாதுகாப்பாக அடுத்த ஊர்க் கூட்டம் முடிகிற வரையில் வைத்திருக்க வேண்டும் என்று தானே குழம்புகிறீர்கள்?'' எனக் கேட்பார்.

குறிப்பறிந்து இப்படி அண்ணா கேட்டவுடனே தோழர்களுக்கு ''ஆமாம்'' என்று தலையாட்டத் தான் தோன்றும். ஏனென்றால், ண்ணா இதுபற்றியெல்லாம் அக்கறைகாட்டாதவர்.

''மாலைகளை பாதுகாப்பாக வைத்திருக்க புளிய மரம் அல்லது வேறு ஏதாவது ஒரு மரத்தின் கிளையிலே கட்டித் தொங்கவிட்டுவிடுங்கள்! அடுத்த ஊர்க் கூட்டம் முடிந்து நாம் திரும்பும்போதும் அவை அப்படியே மரத்திலேயே இருக்கும்!'' என்று வேடிக்கையாகச் சொல்லுவார் அண்ணா!

''மரத்திலே கட்டிவைத்தால் எப்படி அண்ணா பாதுகாப்பாக இருக்கும்?'' என்று தோழர்கள் கேட்பார்கள்.

அண்ணா விளக்குவார்! ''மரத்திலே கட்டி வைத்தால் பேயுக்கோ பிசாசுக்கோ அல்லது தேவதைகளுக்கோ யாராவது மந்தரித்துப் போட்டிருப்பார்கள் என்று யாரும் தொடமாட்டார்கள். மாலைகளைப் பார்க்கிறவர்கள் நாலடி விலகிப் போவார்களே தவிர, கிட்டேகூட வரமாட்டார்கள் இந்த நாட்டில் அவ்வளவு அறியாமையும் மவுடீகமும் ஊறிப்போயிருக்கிறதே!''

அண்ணா இப்படி விளக்கம் கொடுத்தது வீண் போகவில்லை. ஒரு முறை அப்படிக் கட்டப்பட்ட மாலை, அண்ணாவும் தோழர்களும் ஒரு வாரம் கழித்து அந்த வழியாக வரும்போதும் இருந்தது!

ஏ, எஸ். வேணு



சிங்கப்பூர்
மக்கள் தந்த
வரவேற்பு

★

பேரனுக்கு
ஒரு பொம்மை



…வுக்காக நன்கொடையாக
…ணா வழங்கிவிட்டார்.
…இந்தச் சம்பவம் மலே
…யில் தமிழர்களைப் பற்றி
…ணா உருவாக்கிய ஒரு
…ருமிதத்தின் மகுடத்தில்
…த் ப் போற்றப்படுகிறது
…அள்ளி அள்ளிப் பரிசுப்
…ாருட்களைத் தந்தோம்—
…தயும் தனக்காக எடுத்
… கொள்ளாமல் போகி
…ர — என்று கூவிய தமி
…களுக்கு, மலேய நாட்டில்
…ப்புயர்த்திவிட்ட அந்தத்
…வன், பினாங்கில் தங்கி
…ந்ாவிட்டு தாயகம் புறப்
…ம்போது கொண்டு வந்தது
…துவெள்ளி பெறுமான

முள்ள ஒரே ஒரு பேனா மட்டும் தான்.

விமான நிலையம் வரும் போது பினாங்கு நகரின் நடைபாதையில் வைக்கப் பட்டிருந்த கடைகளின் அருகே திடீரென்று அண்ணா காரை நிறுத்தச் சொன்னார்.

வண்டியிலிருந்து இறங்கிப் போய் நடைபாதையில் குவிக்கப்பட்டிருந்த பொம் மைகளில் ஒன்றை எடுத் தார்.

''வெளிநாடு போய் வந் தீர்களே, என்ன வாங்கி வந்தீங்க தாத்தா என்று பேரன் கேட்பான்!'' என்ற படி தம் கையிலிருந்த அந்தச் சின்னப் பொம் மையை அண்ணா திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு,— ''என்ன விலை இது?'' என் கிறார்.

''15 காசு!'' என்று கடைக்காரர் கூறுகிறார்.

''இது போதும்!'' என்று எழுகிறார் — அண்ணா.

''நான்தான் கொடுப் பேன்; நான்தான் கொடுப் பேன்!'' என்று நடை பாதைக் கடைக்காரர்கள், போட்டி போட்டுக்கொண்டு தருகிறார்கள்.

எத்தனை பொருட்களைத் தந்தோம்? அத்தனையையும் மலேயாவிலேயே விட்டு விட்டு ஒரு 15 காசுப் பொம்மையையும், 10 வெள் ளிப் பேனாவும்தான் அண்ணா தமிழகத்துக்கு மலேயாவின் நினைவாகக் கொண்டுவந்தார்

அன்று எங்கள் உள்ளங் களில் எல்லாம் அண்ணா தமிழ கத்தின் முதலமைச்சராக வீற் றிருக்கும் அந்த நாள் விரை வில் வரப் போகிறதுஎன்கிற எண்ணமுண்டு.

ஆனால், அவர் தம்மு டைய 60 வயது நிறை வோடு இந்தத் தமிழ் நெஞ் சங்களைத் தவிக்க வைத்து விட்டுப் போகக்கூடும் என் கிற காலக் கொடுமையைத் துளிகூட நாங்கள் எண்ணிய தில்லை.

காலமே — நீ வென்று விட்டதாக நினைக்கிறாயா?— இல்லை; இல்லை! உன்னால் அவர் உடலைத்தான் எங் களிடமிருந்து பிரிக்க முடிந் ததே தவிர, எங்களுக்குள் நினைவின் நினைவாய்; நெஞ் சத்தில் தெய்வமாய் குடி யமர்ந்திருக்கும் அண்ணாவை பிரிக்க முடிந்ததா, சொல்?

காலமே-உன்னை அண்ணா வென்று விட்டார்! காலத்தை வென்ற தலைவன் என்கிற பெயரை காலமே உன்னால் கூட எந்தக் காலத்திற்கும் அழிக்க இனி இயலாது!


சாதி குலம் என்றும் சமய மதம் என்றும் உப
நீதி இயல் ஆச்சிரம நீட்டென்றும்-ஓதுகின்ற
பேயாட்டம் எல்லாம் பிதிர்ந்தொழிந்த வேபிறர்தம்
வாயாட்டம் தீர்ந்தனவே மற்று

திருவருட்பா 5508
ஊரான் அடிகளார் பதிப்பு

விளம்பர உதவி:

சக்தி சர்க்கரை ஆலை

சக்தி நகர் அஞ்சல்,
வழி-ஈரோடு
கோவை மாவட்டம்

# டான்சியுடன்

## தொடர்புள்ள

## எண்கள்

# 55

# 6,400

# 9,00,00,000

எங்கள் சேவையைப் பற்றி அரிய உதவும் எண்களே இவை. ஆம், பல்வேறு பொருட்களை உற்பத்திசெய்யும் 55 நிறுவனங்கள் எம்மிடம் உள்ளன, அவற்றில் பணியாற்றுபவர்கள் 6400க்கும் அதிகமானோர்.

ஆண்டு ஒன்றுக்கு எமது விற்பனை, ரூ 9 கோடிக்கு மேலாகும். தமிழ் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்குவகிக்கும் டான்சி, எதிர்காலத்தில் மேலும் சிறப்பாக வளர்ச்சி அடைந்து பணியாற்றும்,

**TANSI**


**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

26, ஒயிட்ஸ்ரோடு, சென்னை 600014



தபால் பெட்டி எண்: 3 தொ. பேசி எண்: 214

தோற்றம்: 1910



# ஸ்ரீ கமலாம்பிகா கூட்டுறவு அர்பன் பாங்கு லிமிடெட்: நெ. 378

திருவாரூர் :: தஞ்சை மாவட்டம்

தலைவர் :

## திரு எம். ராம்தாஸ் முதலியார்

பி. ஏ., பி. எல்.,

**புள்ளி விபரங்கள்: 30-6-74ல் உள்ளபடி.**

| | | |
|---|---|---|
| மெம்பர்கள் : | | 14,065 |
| பங்குத்தொகை | ரூ. | 10,43,336 |
| டெப்பாசிட்டுகள் | ரூ. | 58,98,797 |
| கடன்கள் | ரூ. | 52,39,060 |
| 30—6—'74 உடன் முடிந்த ஒரு வருட நிகர லாபம் (Subject To Audit) | ரூ. | 1,47,840 |

கீழ்கண்ட விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | மாத | கெடுவிற்கு | 6.00 % | P.A. |
| 6 | " | " | 6.50 % | " |
| 9 | " | " | 7.00 % | " |
| 12 | " | " | 8.00 % | " |
| 24 | " | " | 8.50 % | " |
| 36 | " | " | 9.00 % | " |
| 48 | " | " | 9.50 % | " |
| 60 | " | " | 10.00 % | " |
| 72 | " | " | 10.50 % | " |
| 84 | " | "ம் அதற்குமேலும் | 11.00 % | " |

ரூ. 5,000/க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் டெப்பாசிட்டர்கள் விரும்பினால் மாதாந்திர வட்டி வழங்கப்படும்.


குறிப்பு: 16—8—1974 அன்று நடப்பில் உள்ள எல்லா பிக்சட்டெப்பாசிட்டுகளுக்கும் கூட இந்த விகிதம் அமுல் செய்யப்படும்.


| | | |
|---|---|---|
| கால் டெப்பாசிட் | 5.75 % | P.A. |
| சேமிப்பு கணக்கு | 5.50 % | " |
| நடப்பு கணக்கு | 0.50 % | " |
| ரெக்கரிங் டெப்பாசிட் | 8.50 % | " |

பாதுகாப்புப் பெட்டக வசதிகளும் உள்ளன.

வாடிக்கையாளர்களின் வளர்ச்சியை விரும்பிச் செயல்படும் மிகப் பெரும் நகர வங்கி

விபரங்களுக்கு காரியதரிசிக்கு எழுதவும்.







# 25 ஆண்டில் கழக இயக்கத்தின் நினைவில் நிற்கும் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 17- 9-1949 | தி.மு.க. தோற்றம் |
| 18- 9-1949 | தி.மு.க. அமைப்புக்கூட்டம். |
| 25-10-1949 | திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்— மதியழகன் அறிக்கை. |
| 4-11-1949 | 'திராவிடநாடு' இதழுக்கு ரூ. 3,000 ஜாமீன் கோரப்பட்டது. |
| 24-12-1949 | 'சந்திரமோகன்' நாடகம் |
| 30-12-1949 | முதல் பொதுக்குழுக் கூட்டம் |
| 1- 1-1950 | திருச்சி மாவட்ட மாநாடு |
| 21- 1-1950 | சென்னை மாவட்ட மாநாடு |
| 2- 5-1950 | கட்டாய இந்தித் திணிப்பு |
| 10- 6-1950 | மதுரை மாவட்ட மாநாடு |
| 18- 7-1950 | கட்டாய இந்தி ஒழிப்பு |
| 6- 8-1950 | வகுப்பு நீதி பாதுகாப்பு நாள் |
| 27- 8-1950 | கழகத் தலைமை நிலையம் இயங்கத் துவங்குதல், 22, தங்கசாலை தெரு. |
| 27- 8-1950 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் |
| 26,27- 8-1950 | நெல்லை மாவட்ட மாநாடு |
| 9- 9-1950 | மத்திய அமைச்சர் தியாகருக்குக் கருப்புக்கொடி |
| 17- 9-1950 | திராவிட நாடு பிரிவினை வாரம் |
| 19-10-1950 | சென்னை மாவட்டத்திற்கு ஒலிபெருக்கி நிதிக்காக கே.ஆர்.ஆர். 'ஓர் இரவு' நாடகம்—ரூ. 3139 வசூல் |
| 23-10-1950 | தலைமைச் செயற்குழு |
| 24-10-1950 | கவர்னர் ஜெனரல் ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி |
| 26-10-1950 | குன்றத்தூர் துப்பாக்கிப் பிரயோகம் |
| 4-11-1950 | கருப்புக் கொடிக்கு அஞ்சி 'காட்கில்' வரவில்லை. |
| 18-11-1950 | கருப்புக் கொடிக்கு அஞ்சி, மகதாப் வரவில்லை. |
| 27-11-1950 | கழகக்கூட்டத்திற்கு நாரணமங்கலத்தில் 144 தடை மீறல். |
| 8-11-1950 | தி.மு.க. மாணவர் மாநாடு—சென்னை |
| 9-11-1950 | கலைஞரின் நாடகம்—குன்றத்தூர் வழக்கு நிதி வாலாஜாவில் |
| 23,24-12-1950 | செங்கை மாவட்ட மாநாடு |
| 7- 1-1951 | கலைவாணரின் கிந்தனார் நாடகம்—திருவாரூர் |
| 7- 1-1951 | மத்திய அமைச்சர் மகதாபுக்குக் கருப்புக்கொடி |
| 24- 1-1951 | தி.மு.க. மாணவர் மாநாடு—எட்டயபுரம்டி |
| 1- 2-1951 | மத்திய உணவமைச்சர் முன்ஷிக்குக் கறுப்புக் கொடி |
| 1- 2-1951 | அண்ணா எழுதிய 'ஆரியமாயை' நூலைத் தடை மீறிப் படித்தல். |
| 3- 3-1951 | தஞ்சை மாவட்ட தி.மு.க. மாநாடு |
| 6- 4-1951 | குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத்துக்குக் கறுப்புக்கொடி |
| 15- 4-1951 | மத்திய இரயில்வே அமைச்சர் என். கோபால் சாமி ஐயங்காருக்குக் கறுப்புக்கொடி |
| 6- 5-1951 | சேலம் மாவட்ட மாநாடு |
| 13- 5-1951 | 'மன்றம்' அச்சக நிதி நாடகம்—கோவை |
| 4- 7-1951 | நேனீ கலவரம்—நாவலர் கூட்டத்தில் |
| 15- 7-1951 | மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராமுக்குக் கறுப்புக் கொடி |
| 16- 7-1951 | தலைமையமைச்சர் பண்டித நேருவுக்குக் கறுப்புக் கொடி—கோலார். |
| 17-11-1951 | பொதுக்குழுக் கூட்டம் |
| 2-12-1951 | தலைமை நிலயத்துக்கு சொந்தக் கட்டிடம்— 'அறிவகம்' வாங்கப்பட்டது. |
| 13,14,15,16-12-1951 | முதல் மாநில மாநாடு |
| 20- 2-1952 | சட்டமன்ற உறுப்பினராகக் கழக ஆதரவுடன் 45 பேர் வெற்றி |
| 6- 4-1952 | பொதுக்குழுக் கூட்டம் |
| 1- 8-1952 | இந்தி ஏகாதிபத்திய எதிர்ப்புநாள் |
| 28-10-1952 | வண்ணை கே.எஸ்.பாண்டியன் படுகொலை |
| 1- 1-1953 | கே. ஏ. மதியழகன் தலைமை நிலையப் பொறுப்பு ஏற்பு |
| 4- 1-1953 | கைத்தறி நாள்—கழக முன்னணித் தோழர்கள் கைத்தறித்துணி சுமந்து விற்றல் |
| 14,15- 2-1953 | கோவை மாவட்ட மாநாடு |
| 2.- 4-1953 | திருச்சி மாவட்ட மாநாடு |
| 31- 5-1953 | பொதுக்குழுக் கூட்டம் |
| 15- 6-1953 | கழகத்துக்கென அதிகாரபூர்வமான நாளிதழ் — 'நம்நாடு' துவக்கம். |
| 18- 6-1953 | புயல் நிவாரண நிதிக்குத் தி.மு.க. உதவி— கைத்தறித்துணி வழங்கல். |
| 27- 6-1953 | இராமநாதபுரம் மாவட்ட மாநாடு |
| 4, 5- 7-1953 | தென்னாற்காடு மாவட்ட மாநாடு |
| 13- 7-1953 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் அண்ணா, நாவலர், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் முதலியோர் கைது. |
| 15- 7-1953 | மும்முனைப் போராட்டம் |
| 29- 9-1953 | கவர்னர் பிரகாசாவுக்குக் கறுப்புக்கொடி |
| 11- 4-1954 | தஞ்சை மாவட்ட மாநாடு— சேலம் மாவட்ட மாநாடு |
| 7- 8 1954 | திருவாங்கூர் தமிழர் அறப்போர் |
| 21,22- 8-1954 | செங்கை மாவட்ட மாநாடு |
| 18,19- 9-1954 | நெல்லை மாவட்ட மாநாடு |
| 6, 9- 1-1955 | மதுரை மாவட்ட மாநாடு |
| 13- 2-1955 | கருநாடகத் தி.மு.க. மாநாடு |
| 20- 2-1955 | பொதுக்குழுக் கூட்டம் |
| 24-4-1955 | பொதுக்குழுக் கூட்டம் |
| 19- 11-1965 | தி.மு.க. மாணவர் மாநாடு |
| 10-12-1955 | கே. ஆர். இராமசாமிக்கு நடிப்பிசைப் புலவர் பட்டம் |
| 20- 2-1956 | தேவிகுளம்—பீர்மேடு பறிபோனதைக் கண்டித்தும் தட்சண பிரதேசத்தை எதிர்த்தும், தமிழகம் முழுவதும் அடையாளப் பொதுவேலை நிறுத்தம் |
| 29- 1-1956 | பொதுக்குழுக் கூட்டம் |
| 17,18,19,20- 5-1956 | இரண்டாவது மாநில மாநாடு—திருச்சி |
| 21- 8-1956 | மகளிர் மன்ற அமைப்புக் கூட்டம் |
| 9- 9-1956 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் |
| 20- 9-1956 | கே. வி. கே. சாமி படுகொலை |
| 29-12-1956 | பொதுக்குழுக் கூட்டம் (சேலம்) |



சந்திரமோகன் நாடகத்தில் காகப்பட்டராக அண்ணா அவர்களும், மற்றும் கழகத்தோழர்களும் பங்கேற்ற காட்சி.

| | |
|---|---|
| 9- 1-1957 | தேர்தலுக்குப் பெண்கள் நிதியளிப்பு |
| 10- 2-1957 | தி. மு. க. தேர்தல் பிரசாரச் சிறப்பு மாநாடு |
| 31- 3-1957 | சட்டமன்ற தி. மு. க. அமைப்பு |
| 26- 5-1957 | புது வரிவிதிப்புக்குக் கண்டனம் |
| 9- 6-1967 | 'ஹோம் லேண்ட்' ஆங்கில வார இதழ் துவக்கம் |
| 22- 7-1957 | கலைஞர் தலைமையில் நங்கவரம் — அறப்போர் |
| 13- 9-1957 | இந்தி எதிர்ப்பு நாள் (தமிழ்நாடு முழுவதும் பொதுக்கூட்டங்கள்) |
| 21,22- 9-1957 | வட ஆற்காடு மாவட்ட மாநாடு |
| 27,28-12-1957 | நாஞ்சில் மாவட்ட மாநாடு |
| 29-12-1957 | பொதுக்குழுக் கூட்டம் |
| 15- 2-1958 | சேலம் மாவட்ட மாநாடு |
| 22- 2-1958 | இராமநாதபுரம் மாவட்ட மாநாடு |
| 2- 3-1958 | கழகத்துக்கு உதயசூரியன் தேர்தல் சின்னம் அதிகாரபூர்வமாக அளிக்கப்பட்டது. |
| 20- 4-1958 | கருநாடக மாநில தி.மு.க. மாநாடு |
| 10,11- 5-1958 | தஞ்சை மாவட்ட மாநாடு |
| 6- 6-1958 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் |
| 5, 6- 7-1958 | கோவை மாவட்ட மாநாடு |
| 25- 9-1958 | பீடித் தொழிலாளர் போராட்டம் |
| 15-11-1958 | எஸ்.எம்.டி. தொழிலாளர் போராட்டம் |
| 15- 1-1959 | சென்னை மாநகராட்சித் தேர்தல் வெற்றி விழா -மேயர் அ.பொ.அரசு பாராட்டுக் கூட்டம் |
| 7- 2-1959 | பொதுக்குழுக் கூட்டம் |
| 16- 5-1959 | நெல்லை மாவட்ட மாநாடு |
| 23- 9-1959 | டாக்டர் தருமாம்பாள் மறைவு |
| 20-10-1959 | திருச்சி மாவட்ட மாநாடு |
| 30-11-1959 | மேயர் அப்துல்காதர்—துணைமேயர் தேவராசன் பதவி ஏற்பு |
| 17- 6-1960 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் |
| 17- 7-1960 | கோவை ஆரோக்கியசாமி படுகொலை |
| 31- 7-1960 | இந்தி எதிர்ப்பு மாநாடு—கோடம்பாக்கம் |
| 14- 8-1960 | தியாகி குடந்தை இராமலிங்கம் மறைவு |
| 25- 9-1960 | பொதுக்குழுக் கூட்டம் |
| 21- 1-1961 | பொதுக்குழுக் கூட்டம் |
| 26- 2-1961 | காவலர் கூட்டம் (திருவொற்றியூர்) |
| 28- 4-1961 | ஆலந்தூர் சின்னான் படுகொலை |
| 10- 5-1961 | மயிலாடி மாரியப்பன் படுகொலை |
| 17- 6-1961 | காஞ்சியில் கருத்தரங்கு |
| 13,14,15,16- 7-1961 | தி.மு.க. பொது மாநாடு (மதுரை) |
| 12-11-1961 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் |
| 7-11-1961 | சின்ன உடுகப்பட்டி கருப்பண்ணன் படுகொலை |
| 28-11-1961 | மேயர் குசேலர் துணைமேயர் மு. வேதாசலம் பதவி ஏற்பு |
| 16-12-1961 | தேர்தல் சிறப்பு மாநாடு—(கோவை) |
| 4-3-1962 | தேர்தலில் வெற்றிபெற்ற கழக வீரர்களுக்குப் பாராட்டு |
| 20-4-1962 | நாடாளுமன்ற மேலவைக்கு அண்ணா தேர்வு |
| 13-5-1962 | சென்னை மாவட்ட மாநாடு |
| 26-5-1962 | பொதுக்குழுக் கூட்டம் |
| 30-6-1962 | கோட்டை முன் பேரணி—விலை உயர்வைக் கண்டித்து |
| 19-7-1962 | விலைவாசி உயர்வுக் கண்டனப் போராட்டம் |
| 27-7-1962 | மூவாலூர் மூதாட்டி இராமாமிர்தம்மையார் மறைவு |
| 23-8-1962 | விலைவாசிப் போராட்டத் தொண்டர் பொற்செழியன் சிறையில் மரணம் |
| 12-10-1962 | விலைவாசி போராட்டத் தொண்டர் கோ. சு. மணி சிறையில் மரணம் |
| 3-11-1962 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் |
| 7- 1-1963 | வானொலியில் அண்ணாவின் சீன ஆக்கிரமிப்புக் கண்டன உரை |
| 8- 6-1963 | பொதுக்குழுக்கூட்டம் |
| 17-11-1963 | இந்தியை எதிர்த்து, அரசியல் சட்ட மொழிப் பிரிவு எரிப்பு |
| 19-11-1963 | சென்னையில் இந்தி எதிர்ப்பு மறியல் |
| 3- 1-1964 | மதுரையில் இந்தி எதிர்ப்பு மறியல் |
| 19- 1-1964 | காஞ்சியில் இந்தி எதிர்ப்பு மறியல் |
| 25- 2-1964 | தூத்துக்குடியில் இந்தி எதிர்ப்பு மறியல் |
| 16- 3-1964 | திருவொற்றியூர் டி. சண்முகம் மறைவு |
| 16- 3-1964 | மேயர் எஸ். கிருட்டிணமூர்த்தி, துணை மேயர் கபாலமூர்த்தி பதவியேற்பு |
| 29- 3-1964 | புரட்சிக் கவிஞர் மறைவு |
| 29-3-1964 | கடலூரில் இந்தி எதிர்ப்பு மறியல் |
| 27-4-1964 | தென்னாற்காடு மாவட்டத்தில் இந்தி எதிர்ப்பு அறப்போர் |
| 27- 5-1964 | பண்டித நேரு மறைவு |
| 5- 7-1964 | கோவையில் இந்தி எதிர்ப்பு அறப்போர் |
| 12- 7-1964 | பொதுக்குழுக் கூட்டம் |
| 20- 8-1964 | குமரியில் இந்தி எதிர்ப்பு அறப்போர் |
| 6- 9-1964 | முகவையில் இந்தி எதிர்ப்பு அறப்போர் |
| 4-10-1964 | சேலத்தில் இந்தி எதிர்ப்பு அறப்போர் |
| 28-11-1964 | மேயர் சி. சிட்டிபாபு—துணை மேயர் அபிபுல்லா பேக் பதவி ஏற்பு |
| 1- 1-1965 | புயல் நிவாரண நிதியளிப்பு |
| 17- 1-1965 | இந்தி எதிர்ப்பு மாநாடு |
| 27- 1-1965 | இந்தியை எதிர்த்து மாணவர் புரட்சி |
| 16- 2-1965 | கலைஞர் கைது—பாளையங்கோட்டை தனிமைச் சிறைவாசம் |
| 14- 3-1965 | முரசொலி மாறன் கைது |
| 23- 8-1965 | போளூர் சுப்பிரமணியம் மறைவு |
| 20-11-1965 | மேயர் மோசஸ்-துணை மேயர் சடகோபன் பதவி ஏற்பு |
| 17-12-1965 | குடந்தை கே. கே. நீலமேகம் மறைவு |
| 30- 1-1966 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் |
| 11- 6-1966 | திருச்சி, தஞ்சை தி.மு.க. மாநாடு |
| 1-10-1966 | மதுரை மாவட்ட மாநாடு |
| 15-10-1966 | செங்கை, நெல்லை தி.மு.க. மாநாடு |
| 30-11-1966 | மேயர் இரா. சம்பந்தம் பதவி ஏற்பு |
| 5-12-1966 | சேலம் மாநாடு |
| 29,30,31-12-1966 1- 1-1967 | விருகம்பாக்கம் தி.மு.க. பொது மாநாடு |
| 6- 3-1967 | தமிழக முதல்வராக அண்ணா பதவியேற்பு |
| 23- 7-1967 | சேலம், தூத்துக்குடி எழுச்சி நாள் |
| 14-10-1967 | பொதுக்குழுக் கூட்டம் |
| 7-11-1967 | தென்சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில்—முரசொலி மாறன் வெற்றி |
| 30-11-1967 | மேயர் அபிபுல்லா பேக்—துணை மேயர் டவளவண்ணன் பதவியேற்பு |
| 1- 1-1968 | அண்ணா சிலைத் திறப்பு (சென்னை) — உலகத் தமிழ் மாநாடு துவக்கம் |
| 15- 4-1968 | அண்ணா அமெரிக்கப் பயணம் |
| 13- 5-1968 | சென்னையில் அண்ணாவுக்கு வரவேற்பு |
| 5- 9-1968 | அண்ணா உடல்நிலை பாதிப்பு |
| 27-10-1968 | மாநகராட்சித் தேர்தல் |
| 6-11-1968 | அமெரிக்காவில் அண்ணா உடல் நலம் பெற்றுத் திரும்புதல் |
| 12-11-1968 | மேயர் வேலூர் நாராயணன்—துணை மேயர் கே. கோவிந்தசாமி பதவியேற்பு |
| 17-11-1968 | மாணவர் தி.மு.க. அமைப்பு |
| 30-12-1968 | நீதிக்கட்சி பொன்விழா |
| 3- 2-1969 | அண்ணா மறைவு |
| 11- 2-1969 | கலைஞர் முதல்வராகப் பதவி ஏற்பு |
| 18- 5-1969 | அமைச்சர் ஏ. கோவிந்தசாமி மறைவு |
| 26-11-1969 | மேயர் வை. பாலசுந்தரம்—துணை மேயர் வெங்கடேசன் பதவி ஏற்பு |
| 21- 2-1970 | திருச்சி மாவட்ட மாநாடு |
| 3- 2-1970 | அண்ணா அஞ்சல் தலை வெளியீடு |
| 19- 2-1970 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் |
| 1- 5-1970 | தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் அமைப்பு |
| 1- 7-1970 | கலைஞர் வெளிநாடு பயணம் |
| 4- 8-1970 | எஸ். வி. லிங்கம் மறைவு |
| 12- 9-1970 | மாநில சுயாட்சி மாநாடு |
| 3-11-1970 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் |
| 20-11-1970 | மேயர் சா. கணேசன்—துணை மேயர் சிலார்மியான் பதவியேற்பு |
| 3- 1-1971 | சென்னை சட்டமன்றம் கலைப்பு |
| 15- 3-1971 | கலைஞர் மீண்டும் முதல்வராகப் பதவியேற்பு |
| 2- 4-1971 | சேலம் முத்துசாமி, கோவிந்தன் படுகொலை |
| 24- 4-1971 | பொதுக்குழுக் கூட்டம் |
| 25- 6-1971 | பேளுக்குறிச்சி ஜி. பி. சோமசுந்தரம் மறைவு |
| 5- 8-1971 | நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி மறைவு |
| 25- 9-1971 | மாணவர் மாநாடு |
| 8-11-1971 | கலைஞர் அமெரிக்கப் பயணம் |
| 22-11-1971 | மேயர் காமாட்சி ஜெயராமன் — துணை மேயர் என்.வி.என். சோமு பதவியேற்பு |
| 17- 1-1972 | தி.மு.க. செயற்குழுக் கூட்டம் |
| 12- 2-1972 | இராமநாதபுரம் மாநாடு |
| 13- 3-1972 | கருநாடகச் சட்டமன்ற உறுப்பினராக திராவிடமணி தேர்வு |
| 3- 3-1972 | தீக்குளித்த கழகச் செம்மல்களுக்கு நிதி உதவி |
| 6- 7-1972 | தஞ்சை மாவட்ட மாநாடு |
| 19- 5-1972 | நீலகிரி மாவட்ட மாநாடு |
| 7- 6-1972 | காஞ்சி மணிமொழியார் மறைவு |
| 15- 6-1976 | தொழிலாளர் தலைவர் பிரதாபசந்திரன் படுகொலை |
| 17- 6-1972 | தருமபுரி மாவட்ட மாநாடு |
| 1- 8-1972 | சிவகங்கை முத்து படுகொலை |
| 15- 8-1972 | மதுரை மாவட்ட மாநாடு |
| 19- 8-1972 | தொழிலாளர் மாணிக்கம், லிங்கம் படுகொலை |
| 14-10-1972 | பொதுக்குழுக் கூட்டம் |
| 12-11-1972 | என். வி நடராசன் மணிவிழா |
| 6- 1-1973 | பொதுக்குழுக் கூட்டம் |
| 20- 2-1973 | கழகத் தோழர் லத்தீப் படுகொலை |
| 15- 6-1973 | தலைமைச் செயற்குழு-பொதுக்குழுக் கூட்டங்கள் |
| 14- 7-1973 | தென் ஆற்காடு மாவட்ட மாநாடு |
| 6- 8-1973 | குடந்தை பெரியார் நீலமேகம் சிலை திறப்பு |
| 24-12-1973 | தந்தை பெரியார் மறைவு |
| 3- 6-1974 | கலைஞர் பொன்விழா, 'கழகக்குரல்' கிழமை இதழ் வெளியீட்டு விழா |
| 6- 7-1974 | தலைமைச் செயற்குழுக் கூட்டம் (சென்னை); இரண்டாம் முறையாகக் கலைஞர், நாவலர் கழகத் தலைவராகவும், பொதுச் செயலாளராகவும் தேர்வு |
| 7- 7-1974 | பொதுக்குழுக் கூட்டம் |
| 15- 9-1974 | அண்ணா பிறந்தநாள் விழா |
| 17- 9-1974 | கழக வெள்ளி விழா |

—தொகுப்பு: 'கழகக்குரல்'

# TRICHY DISTILLERIES & CHEMICALS LIMITED

**17-4, Nungambakkam High Road, 2nd Floor**
**Post Box No. 3327 MADRAS-600034.**

*Manufacturers Of:*

## INDUSTRIAL ALCOHOL AND $CO^2$ GAS.

*Factory at:*

SENTHANNIPURAM, -: :- TIRUCHIRAPALLI-620004

Telephone : 86001/3 Lines } MADRAS.
Telex : SPIRIT MS 7180 }



# சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்,

என் எஸ். 1424.

## அம்மாப்பேட்டை, சேலம்-14.

தந்தி "**Salcomills**"

டெலக்ஸ் "**Salcomsl—204**"

தொலைபேசி:
நிருவாக இயக்குனர் 5370
அலுவலகர் 2040, 2080

தமிழ்நாடு அரசினரால் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனம் ... ரூ 14.74 லட்சம்

நூற்கப்படும் நூல் ... 34,40,60,80,
100,2/60, & 2/100 நெ.
கார்டெட், கோம்புடு

ஆண்டு ஒன்றுக்கு நூல் விற்பனை ... ரூபாய் ஒரு கோடிக்குமேல்.

தரமான பஞ்சிலிருந்து மிகச்சிறந்த நூலாகத்தயார் செய்து தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

விசைத் தறிகளுக்கு தேவையான பாவுகள் தயார் செய்யப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகள் பங்குதாரர்களுக்கு 9 சதவிகித டிவிடெண்ட் வழங்கப்பட்டது. ஒரு பங்கின் விலை ரூ 100/= பிரவேசக் கட்டணம் ரூ 2/- இதர விபரங்களுக்கு ஆலையின் நிரவாக இயக்குநருக்கு விண்ணப்பிக்கவும்.

**G. சண்முகம்**
நிர்வாக இயக்குநர்.

**T. P. ஆறுமுகம்**
தலைவர்,

# கலைச் செல்வங்களை காப்பது நமது கடமை



எழில்மிகு சிற்பங்கள் சிலைகள். கலை நுணுக்கமிக்க ஒப்புயர்வற்ற கவினுறு சரித்திரச் சின்னங்கள் தமிழகமெங்கும் இருக்கின்றன. தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பின் சான்றாக நிற்கும் இக் கலைச் செல்வங்கள் அழிந்து போகாமல் காப்பது நமது கடமை

நம் பழம் பெரும் கலைச் சிறப்பை கட்டி காத்திடவும், தமிழகம் வரும் சுற்றுலா பயணிகள் கண்டு களித்திடவும் இக் கலைச் செல்வங்களைப் பேணிக்காப்போம்!

தமிழகத்தின் சிறப்பியல்புகளை யாவரும் கண்டுகளித்திடப் பணிபுரிவோம்.

இயக்குநர், சுற்றுலாத்துறை

தமிழ்நாடு அரசு
சென்னை-600009.

# குடும்ப விளக்கு என்றும் எரிய குடும்ப நலத்திட்டம் உதவும்!

"சாவதற்கோ பிள்ளை தவிப்பதற்கோ பிள்ளை
காதலுக்கு வழிவகுத்து கருப்பாதைச் சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்."


—பாரதிதாசன்

அளவின்றி குழந்தைகளைப் பெற்றவர்
அளவில்லாத் துன்பம் அடைவதைக்கண்ட
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்
குடும்ப நலத்திட்டத்தை வலியுறுத்த
"குடும்ப விளக்கு" என்னும் நூலில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்

எனவே,

உங்கள் "குடும்ப விளக்கு", என்றும் அணையாதிருக்க
ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொண்ட பிறகு
அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம்!
கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளலாம்!
அல்லது வழக்கில் இருந்து வரும் கருத்தடைச்சாதனங்களைப் பயன்படுத்தலாம்!
இதுபற்றி மேலும் மேலும் விவரம் அறிய உங்கள் அருகாமையில் உள்ள குடும்ப நிலையத்தை அணுகுங்கள்.

**குடும்ப நலத்துறை,**
**தமிழ்நாடு அரசு.**



# அண்ணாவின் ஓய்வற்ற உழைப்பு!

**இராம. அரங்கண்ணல். எம்.எல்.ஏ**

அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி திராவிட கழகமாயிருந்தபோது சொல்லப்பட்ட பெரிய குற்றச்சாட்டு, ''கூட்டத்துக்கு ஒத்துக் ார வார். ஆனல் ரமாட்டார்!' என்பதுதான். அண்ணா சொன்னபடி ஒரு கூட்டத்துக்கு வந்துவிட்டால் ஆச்சரியப்படுவார்கள் அனைவரும்—அப்போது. ''அப்படிப்பட்டவரா, புதுக்கட்சி ஆரம்பிக்கப் போகிறார் என்று பெரியார் அவர்கள்கூட 'விடுதலை'யில் எழுதினார்கள். திராவிட கழகத்திலிருநது 'கண்ணீர்த் துளிகள்' என்று குறிப்பிடப்பட்டு ஏராள ானோர் வெளியேறிய நேரம் அது.

'விடுதலை' தினசரியிலிருநது அண்ணாவால் 'திராவிடநாடு' வார ஏட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்ட நான், காஞ்சியில் அண்ணா கூடவே இருக்கும் வாய்ப்புப் பெற்றேன். பெரியாரை விட்டுப் பிரிநத நம்மை 'சோஷியலிஸ்டு'க் கட்சியில் சேருமாறு 'கல்கி' எழுதினர். திராவிட கழகத்தையும் விடுதலைப் பத்திரிகையையும் நாம்கைப்பற்றவேண்டும் என்று கவிஞர் பாரதிதாசன் போன்றோர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். தி. க. விலிருந்து விலகிக் கொண்டிருந்தோர் பட்டியல் அதிகமாகிவிட்டது. மாதங்கள் ஓடிக்கொண்டேயிருந்தன.

அண்ணாவோ புதிய கட்சி ஆரம்பிப்பது பற்றியோ, அதற்குடைய பெயர் என்னவென்பது பற்றியோ, மூச்சுக்கூட விடவில்லை. என்னைப் போன்றவர்களுக்கு ''பிரிந்துதான் வந்துவிட்டோமே! பேசாமல் இன்ன கட்சி எங்களுடையது'', என்று அறிவிக்காமல் அண்ணா மௌனமாயிருக்கிறாரே, அய்யா பெரியார் சொல்வதுபோல, 'நமக்கென்ன' என்று விட்டுவிடுவாரோ என்ற சந்தேகம் கூட வர ஆரம்பித்தது.

ஒருநாள் மாலை!

நான், மறைந்த வாணன் (வேலாயுதம்), நண்பர் கஜேந்திரன் மூவர் மட்டும் அண்ணாவுடன், 'திராவிட நாடு' மேல் மாடியில் பேசிக்கொண்டிருந்தோம். ''என்ன அண்ணா உங்கள் உத்தேசம்? எல்லோரும் கேட்கிறார்கள், என்ன செய்யப்போகிறோம், நாம்?'', என்று கேட்டேன். என் குரலில் அண்ணா காலதாமதம் செய்கிறாரே எந்த முடிவுக்கும் வராமல் என்கிற 'தொனி' இருந்தது. அதைப் புரிந்துகொண்ட அண்ணா நிதானமாகச் சொன்னார்:

''அய்யாவைவிட்டு ஏராளமானவர்கள் விலகியிருக்கிறார்கள்! விலகியவர்கள் எத்தனை நாளைக்குத் தாங்குவார்கள் என்று பார்க்க வேண்டாமா? வெள்ளம் கரைபுரண்டோடும்போது புல் பூண்டு எல்லாம் சேர்ந்துதான் வரும். வேகத்தைக் கண்டு நாம் எடைபோட்டுவிடக் கூடாது. எது தங்கும், எது தாங்கும் என்பது வெள்ளம் வடியும் போதுதான் தெரியும். எந்தப் பிரச்னைக்கும் 'வடிய' நேரம் தரவேண்டும். யார்யார் தாங்காமல் மறுபடியும் அய்யாவிடம் சேர்வார்கள், யாரார் தங்குவார்கள் என்னவானாலும்—என்கிற கணக்கு 'காத்திருந்தால்'தான் கிடைக்கும் அதற்குத்தான் காத்திருக்கிறேன்!'' என்று பதில் சொன்னார்கள். தன்னுடைய புதுப் பயணத்துக்கு வருகிறவர்கள் 'பொறுமை' கருதுகிறவர்களாயிருக்க வேண்டும் என்பது அவர் எண்ணம். பொங்குவது எளிது; அதே போல பொங்கியது சீக்கிரமும் அடங்கிவிடும். பொங்கி விட்டு உடன் அடங்கி விடுவதல்ல அரசியல்! நீண்ட பயணம் நடத்தியாகவேண்டும் பொது வாழ்க்கையில். அந்தப் பயணத்துக்கு எத்தனைபேர் ''பொங்கிவிட்டு வடியாமல், ''பொறுத்துப் போகிறவர்களாக'', தன் தாமதத்தையும் '' தாங்கிக்கொள் ''கிறவர்களாக இருப்பார்கள் என்று கால தாமதம் செய்து கணக்கிட்டார் அவர்!

ஃ ஃ ஃ

தி. மு. கழகத்தைத் துவக்குவதில்தான் காலதாமதம் செய்தாரே ஒழிய, துவக்கிய பின் அவர் நடத்திய சூறாவளிப் பயணம் சாதாரணமானதல்ல. ''கூட்டத்துக்கு ஒத்துக்கொண்டு வராதவர்'' என்று குற்றஞ்சாட்டப்பட்ட அண்ணாவைக் காண முடியவில்லை! மாதம் 30 நாட்களும் சுற்றுப்பயணம், சுற்றுப் பயணம் என்றே அலையலானார்.




ஒருநாள் அவருக்கு நல்ல சளி. காய்ச்சல் இருப்பது போலக்கூட இருந்தது. இருமல் வேறு! வந்தவாசிக்கு அருகில் ஒரு திருமணம். அண்ணாவின் உடல்நிலையைக் கண்ட அண்ணாவை ஆளாக்கிய சிற்றன்னையான 'தொத்தா' அவர்கள், ''இந்த உடம் போடு என்னப்பா? பேசாமல் படு..'', என்றார்கள்.

தொத்தா சொல்லி அண்ணா எதையும் தட்டமாட்டார். ஒரு 'கப்' காப்பியைச் சாப்பிட்டுவிட்டு, காரில் ஏறிப் போய்விட்டார். அண்ணா.

தொத்தாவுக்கு கோபம்! ''என் பேச்சைக் கேட்காமல் உடம்பு இப்படியிருக்கப் போகிறானே? இவன் வீட்டில் எனக்கென்ன வேலை?'' என்று கோபித்துக் கொண்டு அவர்கள் சென்னைக்கு போய்விட்டார்கள். மா யில் திரும்பிய அண்ணாவு குச் சங்கடமாயிருந்தது

ஈழத்தடிகளைக் கூப்பிட் ''தொத்தாவிடம், அவர்க பேச்சைக் கேளாமல் நா போனதால், கடுமையா காய்ச்சல் வந்து படுத்திரு கிறேன் என்று சொல்லு கள்! உடனே வந்துவிடுவா கள்..'', என்று சொல் அனுப்பினர். பொய்தான

தொத்தாவந்ததும் கூடத் ஈசிச்சேரில் எங்களோ அரட்டையடித்துக் கொ டிருந்த அண்ணாவைப் பார் தார்கள். ''தொத்தா! நா கூட்டத்துக்குப் போகாவி டால்தான் காய்ச்சல் வரு நீ சொல்லியும் போனே காய்ச்சல் போய்விட்டத பார்த்தாயா? எங்களை போய் தடுக்கிறாயே!'' என் கிண்டலாகச் சொல்லிச் சிரி தார்கள். அண்ணாவி கடமையுணர்வைக் கண் எனக்கு, ஆரம்பத்திலிருந்த ''அண்ணா சொன்னப கூட்டத்துக்கு வரமாட்டா என்கிற சந்தேகம் போ விட்டது. ஒருநாள், அண்ண விடம் கேட்டேன், ''உ களைப்போய் அய்யா 'சோ பேரி' என்று சொன்னா எப்படியண்ணா?'' என் ''அவருடைய பார்வையி நான் சோம்பேரி. ஏன் நா அப்படியிருந்தேன்? என். அய்யாவுக்குத் தெரியு பொது மக்கள் இயக்கமா மாறும் கழகத்தைப் பெட்ட குள் அடைக்க அவர் விரு பினர். நான் சோம்பே என்று சொல்லப்பட்டே அவ்வளவுதான்!'' என் பதில் சொன்னர், அண்ணா.



# சரித்திர நினைவுகள்

**கவிஞர் மணிமொழி**

பூபிறந்த காரணத்தால் மனமயக்கப்
புதுமணங்கள் பிறந்ததுண்டு! மண்ணெழுப்பும்
ஈபிறந்த காரணத்தால் தித்திப்புத்தேன்
இவ்வுலக மாந்தருக்குக் கிடைப்பதுண்டு!
தீபிறந்த காரணத்தால் உணவுப்பண்டம்
தின்பதற்குத் தோதாக வாய்ப்பதுண்டு!
நீபிறந்த காரணத்தால் அண்ணா! எங்கள்
நினைவுகளில் சரித்திரங்கள் படிந்ததண்ணா!

பாசத்தின் வடிவம்நீ! பிள்ளையைப்போல்
பழகுவதில் மன்னவன் நீ! தூரதூர
தேசத்தார் என்றாலும் வேற்றினத்தைச்
சேர்ந்தவரா? பிறமதமா? என்றெண்ணாமல்
நேசத்தால் நெருங்கிவந்து தென்றலைப்போல்
நெக்குருகச் செய்பவன்நீ! அன்றோர்நாள்
சீசர் ஆண்ட ரோம் நகரைக் காணச்சென்றாய்
சேசுதாசர் போப்பினையும் கண்டுவந்தாய்!

ஆசி பெறத் தான் செல்வார் மற்றவர்கள்
அற்புதனே நீசென்றாய்; போப்பாண்டவரோடு
பேசிநின்றாய் என்னஏது? அறியார்யாரும்
பேசிவந்தாய் சிலநாளில் விளைவுகண்டோம்
மாசறியா 'மாஸ்கரனேஸ்' என்னும் வீர
மாமணியை கோவாவின் காந்திதனை
நீசனெனக் குற்றங்கள் ஏற்றிவைத்தே
நெடுங்காலம் போர்த்துக்கல் சிறையிலிட்டார்!

தாயகத்தின் தளையறுக்கத் துணிந்த வீரன்
தளையிறுக்கத் தனிச்சிறையில் கிடந்தபோதே
பேயரசின் மதமடக்க ஜவகர்நேரு
பெரும்படையை ஆங்கனுப்பிப் பகையைவென்று
மேயவந்த கூட்டத்தை விரட்டிவிட்டார்
மேதினியில் கோவாவின் கொடிபறக்க
சீயமெனப் பாடுபட்ட வீரச்செல்வன்
சிறையறையில் சித்ரவதைப் பட்டிருந்தான்!

மனிதரெனப் பிறந்தாலும் தெய்வநோக்க
மகத்துவங்கள் கொண்டிருந்த அண்ணா! அந்தப்
புனிதனுக்கு விடுதலையை வேண்டிநின்றாய்
போப்பிடமே போய்ச்சொன்னாய்; கொஞ்சநாளில்
மனிதருக்குள் தெய்வமென மலர்ந்த உன்றன்
மனம்மகிழச் செய்தியொன்று வந்ததன்றோ?
'தனிச்சிறையில் அடைபட்டுக் கிடந்த வீரன்
தளையகற்றி விடுதலையும் தந்துவிட்டார்!

சிறைப்பறவை மாஸ்கரனேஸ் அழகுவிண்ணைச்
சிறகடித்து நீள்வானில் பறந்துவந்தே
அறப்பறவை அண்ணா உன் செயலுக்காக
அகங்களித்தே நன்றிமிகச் செலுத்தலானார்!
நெறிப்பறவை யாய்வாழ்ந்து எமது நெஞ்சில்
சிறைப்பறவையாய்நிலைத்த அண்ணா உன்னால்
சிரிப்பவர்கள் பலகோடி; அவர் சிரிப்பில்
சிரித்தென்றும் நிற்கின்றாய் வணங்குகின்றோம்!






பேராசிரியர்களான — மறைமலை அடிகளார், நாவலர் சோம சுந்தர பாரதியார், கரந்தை உமாமகேசுவரம் பிள்ளை முதலானவர்களும் 'இந்தி' எதிர்ப்பைத் தொடங்கினர். தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும், அஞ்சா நெஞ்சன் அழகிரியும், மூத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதமும் பட்டி வீரன்பட்டி சவுந்திரபாண்டியனும், விருதை வி. வி. இராமசாமியும், திருச்சி தி. பொ. வேதாசலமும், டாக்டர் தருமாம்பாள் அம்மையாரும், நீலாம்பிகை அம்மையாரும், மறை. திருநாவுக்கரசும் அப்படிப்பட்ட அறப்போரில் முன் நின்றனர். அன்று தொடங்கிய அந்த அறப்போர், இன்றளவும் தொடர்ந்து பல கட்டங்களாக நடைபெற்றுவந்து ஒரு எரிமலையாக உயர்ந்து நிற்பதை யாவரும் அறிவர்.

நீதிக் கட்சி — சுயமரியாதை இயக்கத்தின் தொடர் கொண்டு — திராவிடர்க் கழகம் தோன்றக் காரணமாயிற்று. திராவிடர்க் கழகம் இந்தி எதிர்ப்புக் கொள்கையிலே உரம் பெற்று திராவிட முன்னேற்றக் கழகம் பிறக்க ஏதுவாயிற்று. காங்கிரஸ்க் கட்சியும் கூட அடிப்படையில் மாறுபட்டு நீதிக் கட்சியுடன் வலுவாக மோதி எதிர்த்து நின்ற அரசியல் கட்சியாக இருந்தும்—நாளடைவில் — ஆட்சி நிருவாகத்தில் அமர்ந்த பின் நீதிக் கட்சியின் கொள்கைகளை நடைமுறையில் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது எனில் — நீதிக் கட்சியின் அடிப்படையே 'நீதி'யேயாகும் என்பது தெளிவாகும்.

இவ்வாறு சமுதாயத்தில் ஏற்பட்டிருந்த நியாயமற்ற ஏற்றத்தாழ்வுகளை மாற்றி—நியாய அடிப்படையில் சமுதாயம் ஒற்றுமை காண வேண்டி, உண்மை ஒளி பரவச் செய்த நீதிக் கட்சி பல இயக்கங்களிலும், மாற்றுக் கட்சியிலுங்கூட தனது இலட்சிய முத்திரையைப் பதிவு செய்துள்ளது என்று காண்போர் — அதனைப் போற்றுதல் இயல்பேயன்றோ?

(நன்றி : நீதிக் கட்சியின் பொன் விழா மலர்)



-ம் பக்கம் தொடர்ச்சி)

...ஏற்படுத்தப்பட்ட
...ட்பு மாணவர்களுக்கென
உதவித் தொகை வழங்
திட்டமும் நீதிக் கட்
...ால் தான்செயல்படுத்தப்
...டது.
...பொப்பிலி அரசர் நீதிக்
...சியின் சார்பில் முதல
...ச்சராக இருந்த காலத்
...தான் — இனும்தாரி முறை
...ல் — நிலத்தில் பாடு
...ம் ஏழை உழவர் தம்
...மை பாதிக்கப்படுவதைக்
...டு இனும் சட்டம்
...த்தியமைக்கப்பட்டது.
...ந்து ஏற்பட்ட எதிர்ப்பு
...கையாயினும் – அவை
...கெல்லாம் ஈடுகொடுத்து
...தச் சட்டத்தை நிறை
...ற்றிய பொப்பிலியின்
...ற்றல் தெரிதம் பாராட்
...த்தக்கது. அதன் பயனை
...தான் பின்னாட்களில் காங்
...ஸ் கட்சி — ஜமீந்தாரி—
...ப்புச் சட்டத்தை நிறை
...ற்றது எளிதாயிற்று
...ால் மிகையாகாது.

...சென்னை மாநிலச் சட்ட
...றம், அறிஞர் பலரை
...ப்பினராகக் கொண்டு

இரட்டை ஆட்சி முறையில் கிடைத்த அவ்வளவான உரிமைகளைப் பயன்படுத்தி — சிறப்பான பல சட்டங்களை நிறைவேற்றிய செயல் என்றும் போற்றத்தக்கதாகும். 'சட்டம்' போற்றப்பட்டு, 'ஒழுங்கு' காக்கப்பட்டு, 'நிர்வாகம்' முறைப்படுத்தப்பட்டு, 'அமைதி' நாட்டப்பட்டு, 'சமநீதி' வழங்கப்பட்டு, 'ஏற்றம்' காணப்பட்டது என்பது வரலாற்று உண்மை.

1937-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியின் நாட்டு விடுதலைக் கொள்கையின் முக்கியத்துவம் வலிவு பெற்றதால் — நீதிக் கட்சி—கடுந் தோல்வியை ஏற்க நேரிட்டது. அகில இந்தியக் காங்கிரசு கட்சி — சென்னையிலும் ஆட்சிப்பீடம் ஏறியது.

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் முதலமைச்சராக அமர்ந்த அந்நாட்களில்தான், இந்தி மொழி தேசிய மொழி என்னும் பெயரால் பள்ளிப் பிள்ளைகட்கெல்லாம் கட்டாயப் பாடமாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்னும் ஆணை பிறந்தது. அதனைக் கண்டித்து — கட்டாய இந்தியை எதிர்த்து அறப்போர் தொடங்கிய முதல் அரசியல் கட்சியும் நீதிக் கட்சிதான்.

அந்நாட்களில் நீதிக்கட்சித் தலைவராக விளங்கிய பெரியார் இராமசாமி அவர்களும், செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்களும், சர். ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களும் தமிழ்

# நினைவுகளே... ஓ நினைவுகளே!



வழக்கறிஞர் தில்லை வில்லாளன்

## அண்ணாவின் விஞ்ஞானி

வேலைக்காரி திரைப்படம் வெளியான பின்னர் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் ஜூபிடர் நிறுவனத்தார் அடுத்த கதையை எழுதும்படி கேட்டார்கள். அண்ணா அவர்களும், ஜூபிடர் நிறுவனத்துக்காக 'விஞ்ஞானி' என்ற ஒரு கதையை எழுதத் தொடங்கினார்.

ஆனால் அப்போது கழகத்திற்கு நிதி சேர்க்க வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்ட உடனே அந்த விஞ்ஞானியைத் திரைப்படமாக எடுக்கலாம் என்று அண்ணா முடிவு செய்தார். ஆனால் எதையும் செய்வதாக முதலில் சொல்லிவிட்டு, உரிய நேரத்தில் செய்யாமல் விட்டுவிடும் ''நடிகர்'' ..இந்த முயற்சியில் ஒத்துழைக்கவில்லை என்றதுமே—கழகத்துக்கு நிதி சேர்ப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட இருந்த ''விஞ்ஞானி'' கதை உருவில் கூட முழுமையாக வளராமல் போய்விட்டான்.

## பொழுதுபோக்கு!

வெளியூர்க் கூட்டங்களுக்குப் போகிறபோது கிராமியக் கலை மரபுகளுக்குப் புகலிடம் தரப்படும் ஊர்கள் பேரறிஞர் அண்ணாவுக்குப் பிடித்தமான ஊர்களாகப் பெருமைப் படுவதுண்டு.

குறிப்பாகத் தெருக் கூத்து நிகழ்ச்சிகள் நடப்பதாக அறிந்தால் அந்தக் கிராமங்களில் அண்ணா தங்கியிருக்கவும் தயங்கமாட்டார்.

ஒரு சமயம் தம்முடைய நண்பர்களோடு அண்ணா திருவண்ணாமலையில் ஒரு தெருகூத்து நிகழ்ச்சியைப் பின்னாலிருந்து ரசித்துக் கொண்டிருந்தார்.

வேடங்கட்டியிருந்த அரிச்சந்திரன் தான் நடிக்க வேண்டிய காட்சியை விட்டுவிட்டு கூட்டத்தைக் கிழித்தபடி ஓடோடி வந்தான். கூத்துப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பரபரப்போடு திரும்பிப் பார்த்து''அதோ-அண்ணா.. அண்ணா!'' என்று கூவினர்.

கூத்து நிகழ்ச்சிக்கு அவ்வாறு தாம் இடையூறு ஆகக்கூடாது என்று அதன் பிறகு அண்ணா கூட்டத்தோடு கூட்டமாகத் தலையில் முண்டாக கட்டிக்கொண்டு வெற்றுடம்போடு உட்கார்ந்து விடுவார் அல்லது யார் பார்வையிலும் படாமல் காருக்குள் அமர்ந்து ரசிப்பதும், அல்லது கூத்து நடக்கும் மேடைக்கு எதிரே மாடி வீடுகள் இருந்தால் அங்கே அமர்ந்து பார்ப்



புதுமாகத் தம்முடைய ரசனையை மாற்றிக் கொண்டார்.

பெரிய காஞ்சீபுரத்தில் வருடமொருதடவை மூன்று நான்கு நாட்கள் தொடர்ந்து தெருக்கூத்து நடக்கும். அவற்றை ஒவ்வொரு நாளும் விடியும் வரையில் ஆரம்ப காலத்தில் ரசித்தவர் அண்ணா.

தெருக் கூத்து அவருக்கு எப்படி ஒரு பொழுதுபோக்கோ — அதேபோல் இசையிலும் லயித்துப் போகிறவர் அண்ணா. நாதசுர இசையென்றால் அவருக்கு தேம்பாகு.

ஜூபிடர் நிறுவனத்தார் வேலைக்காரி படத்துக்காக அண்ணாவுக்கு அளித்த கார் எம். எஸ். எக்ஸ் 4758.

அந்தக் கார் வாங்கிய பின்னர் அண்ணா தமிழகத்தில் எங்கு கூட்டங்களுக்கு ஒப்புக் கொண்டாலும் அந்தக் காரிலேயே பயணம் செய்வார். சுந்தரராஜன்தான் அண்ணாவின் காருக்குச் சாரதி.

## பாதி திராவிட நாடு வாங்கிய கார்!

ஒரு பயணம் புறப்பட்டால் குறைந்தபட்சம் பத்து நாள் இருபது நாள் ஆகும் திரும்பிக் காஞ்சிபுரம் வர. அத்தனை நாட்களிலும் கார் ஆயிரம் இரண்டாயிரம் என மைல் பயணம் போயிருக்கும்!

செல்லமாக அண்ணாவாலும் நண்பர்களாலும் ''சுந்தா'' என்று அழைக்கப்படும் சுந்தரராஜன் அண்ணாவிடம் ஒரு தடவை அந்தப் பழைய காரின் நிலைமையைப் பற்றிச் சொன்னது இது: ''எம். எஸ். எக்ஸ் பார்டி செவன் ஃபிப்டி எயிட் வண்டியில் சுற்றியே அண்ணா பாதி திராவிடநாட்டை வாங்கியாகிவிட்டது. இன்னும் மீதியை வாங்க—வேறொரு கார் வாங்க வேண்டியதுதான்!'

1952 பொதுத் தேர்தலின் போதும் இதே காரில்தான் கழகத்தின் திராவிடநாடு கொள்கைக்கு ஆதரவு தருவோருக்குத் தேர்தல் பிரச்சாரம் செய்ய கழகம் எடுத்த முடிவின்படி அண்ணா பயணம் செய்தார்.

முதல் கூட்டம் திண்டிவனத்தில் திருக்குறள் முனுசாமியை ஆதரித்துப் பேசிவிட்டு — அடுத்தடுத்து தமிழகம் எங்கும் பயணம் புறப்பட்டார் அண்ணா.

திரும்பி திருக்கழுக்குன்றம் சீதாபதி இல்லத்தில் வந்து தங்கும்போது சரியாக 45 நாட்கள் முடிந்துவிட்டன. தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

## எழுத்து பிறக்கும் இரவுப் பொழுது!

இப்படி அண்ணாவை முன் இருக்கையில் ஏந்தியபடி அவருடைய பயணத்துக்கு உதவியது அந்த இந்துஸ்தான் கார்!

பெரும்பாலும் அண்ணா இரவு வேளைகளில்தான் அதிகம் எழுதுவார். எழுதுவதற்கு முன்பு ஏதாவது பேசிக் கொண்டேயிருப்பார். அல்லது ஒழுங்காக காகிதத்தைச் சீர்படுத்துவது; ஏதாவது குறிப்புகள் எழுதிக் கொண்டிருப்பது இப்படி எதையாவது செய்து கொண்டிருப்பாரே தவிர எழுத ஆரம்பிக்கமாட்டார். நண்பர்கள் குழாம் சூழ்ந்திருந்தால், எல்லாரும் உறங்கிப் போன பின்னர் அண்ணாவின் பேனா காகிதத்தில் ஓட ஆரம்பிக்கும். எழுதத் தொடங்கினால் விடிவதற்குள் என்னென்ன எழுத நினைத்தாரோ அத்தனையும் எழுத்தில் பிறந்துவிடும்.

எழுதுவது போலவே படிப்பதிலும் அண்ணாவை ஈர்ப்பது இரவின் அமைதிச் சூழ்நிலையே.

## வேடிக்கைப் பேச்சுகள்!

தொலைதூரம் காரில் செல்லும்போது அண்ணா உடன் செல்லும் தோழர்களிடம் வெகுளியாகவும் வேடிக்கையாகவும் பேசிக் கொண்டே வெடிச் சிரிப்புகளை உதிரச் செய்வதுண்டு.

ஒரு தடவை ஆள் நடமாட்டமே இல்லாத பாதையில் கார் சென்று கொண்டிருந்த போது — ''இந்த வழியில் ஆளை மடக்கித் தாக்குவார்களாமே!'' என்று காரோட்டி சுந்தாவிடம்கேட்டார்அண்ணா

''அவர்கள் மடக்கி என்ன பிரயோஜனம் அண்ணா? நம்மிடம்தான் பணம் காசு இல்லையே?'' என்று பதில் கூறியிருக்கிறார் சுந்தா.

''அட, அதனாலே தான் கேட்கிறேன்..பெரிய மனுஷங்க மாதிரி சட்டை துண்டையெல்லாம் போட்டுட்டு, காரிலே வரீங்களே..ஏய்யா பணம் எடுத்தாறலேன்னு மடக்கி ஒதைக்க மாட்டானுகளா?'' என்று கேட்டுத் தமது செங்காவிப் புன்னகையை உதிர்த்தாராம் அண்ணா.

இப்படி நண்பர்களோடு பேசும்போது அண்ணா காஞ்சிபுரம் வட்டாரத்தில் புழக்கமான தமிழில் பேசுவது அவருடைய எளிமைக்கும் அடக்கத்துக்கும் அணி செய்வது போலிருக்கும்.

## தாமதம் யாரால்?

கூட்டங்களுக்கு அண்ணா எப்போதும் தாமதமாகச் செல்கிறார் என்று ஒரு பொதுவான கருத்து நிலவி வந்ததுண்டு. இதைச் சில நெருங்கிய தோழர்கள் அண்ணாவிடமே எடுத்துச் சொன்னார்கள்

சிதம்பரம் அருகில் சேத்தியார் தோப்பில் ஒரு பொதுக் கூட்டம். ஆறுமணிக்குத் தொடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. சிதம்பரத்திலிருந்து ஐந்தே முக்கால் மணிக்கெல்லாம் புறப்பட்டு விட்டார் அண்ணா.

சேத்தியார் தோப்பு வெள்ளாறு படுகையில் பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அண்ணாவும் தோழர்களும் வந்தபோது அதுவரையில் ஒலிபெருக்கிகூடப் பொருத்தப்படவில்லை.

அண்ணா புன்னகை பூத்தவாறு — ''சரி கொஞ்சம் தாமதித்து வருவோம்'' என்று கும்பகோணம் பாதையில் வண்டியை ஓட்டவிட்டு இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு திரும்பியபோதுதான் லேசாக மைதானம் நிரம்பிக் கொண்டிருந்தது.

தம்மைக் காலதாமதம் செய்வதாகக் கூறிய தோழர்களுக்குப் படுவது போல் அண்ணா சொன்னார்: ''எட்டரை மணிக்குப் பேச வேண்டிய நான் ஆறுமணிக்கே வந்து என்ன பலன்? அதனால்தான் நான் பேச வேண்டிய நேரத்துக்குச் சரியாக வந்து சேருகிறேன். இது நான் கூட்டத்திற்கு வரத் தாமதிப்பதாகப் பொருளில்லை!''

## கடிகார முள்போல்

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய பின்னர்,

கடிகார முள்போல் சுழன்று வேளைக்குச் சாப்பிடாமல், கண் விழித்து கார்ப் பயணம் செய்து ஓயாமல் அண்ணா உழைத்த 18 மணிக்கால உழைப்பு வீணாகவில்லை.



விடுதலைக்கு முன் இந்தியாவில் பல தலைவர்கள் தோன்றினார்கள். விடுதலைக்குப் பின்னர் நாட்டுக்குத் தேவையான சில தலைவர்கள் தோன்றினார்கள். அவர்களில் தேசியத் தலைவராக வளர்ந்து அகில உலகத் தலைவராகப் பிரபலமடைந்தவர் அண்ணா.



# சுப்புராயன் போட்ட கணக்கு பலிக்கவில்லை!

திராவிடர் கழகத்தவர்கள் அனைவரும் கருப்புச் சட்டைதான் போடவேண்டும் என்பது பெரியாரின் வாதம்.

எப்போதும் கருப்புச்சட்டையையே போட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நமது ஊர்வலங்களில், மாநாடுகளில், பொதுக்கூட்டங்களில் மட்டும் போட்டுக் கொண்டால் போதும் என்பது பேரறிஞர் அண்ணாவின் யோசனை.

பெரியார் எப்போதும்போல் பிடிவாதமாகத் தனது கருத்தை வலியுறுத்தினார். அண்ணா பெரியார் கருத்தின்மீது வேறுபாடு கொண்டிருந்தார்.

திராவிடர் கழகத்துக்குள் இந்த இரு கருத்து பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இருந்ததைப் பயன்படுத்திக்கொண்டு, திராவிடர் கழகத்தையே அழித்து விடலாம் என்று காங்கிரஸ் மேலிடத்தார் ஒரு கணக்குப் போட்டார்கள்!

அப்போது உள்துறை அமைச்சராக இருந்தார் டாக்டர் சுப்பராயன். அவருக்கு, கழகத்துக்குள் கோஷ்டிப் பூசல் ஏற்பட்டிருப்பதாக ஒரு ஊகம். ஊகத்துக்குக் காரணம் பெரியாருக்கும் அண்ணாவுக்குமிருந்த கருத்து ஊடல்.

இந்தக் கருத்து ஊடலை மூச் சண்டையாகப் பாவித்துக்கொண்டு கழகத்தை அழித்து விடலாமே எனச் சந்தர்ப்பத்தை வலைவிரித்தார் உள்துறை அமைச்சர்.

கருப்புச் சட்டையைத் தடைசெய்வது என்று திட்டமிட்டார் அவர். அப்படிச்செய்தால் கருப்புச் சட்டை எப்போதும் தேவை என்னும் பெரியாருக்கும், அதில் வேறுபட்ட அண்ணாவுக்கும் சார்பாக உள்ளவர்களை அடையாளம் கண்டுவிடலாம்; அத்தோடு கழகத்தையும் வளரவிடாமல் நசுக்கி விடலாம் என்பது காங்கிரஸ் அரசாங்கத்தின் திட்டம்.

''தடையா விதிக்கிறாய்? அதை மீறுவோம் நாங்கள்!'' என்று, எல்லோரும் கருப்புச்சட்டை அணிந்து சென்னை மெமோரியல் அரங்கில் கூடுவது எனக் கழகத்தின் சார்பில் பெரியார் அறிக்கை ஒன்றினைத் திடீரென விடுத்தார்.

அப்போது அண்ணா காஞ்சிபுரத்திலிருந்தார்.

பெரியாரின் அறிக்கையை மறுநாள் படித்த பிறகுதான் இப்படி ஒரு ''தடை மீறுதல்'' போராட்டம் இருப்பதே அண்ணாவுக்குத் தெரியும்.

* * *

மெமோரியல் அரங்கத்திற்கு கருப்புச்சட்டை அணிந்து வருகிறவர்கள் யார் யார் என்று போலீஸ் புலனாய்வுத் துறையினர் குறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அண்ணாவை அதுவரையில் காணவில்லை.

இந்தத் தடைமீறல் போராட்டம் பிசுபிசுத்துப் போய்விட்டால் அதையே சந்தர்ப்பமாக வைத்து காங்கிரஸ் மேலிடம் கழகத்தை நசுக்கச் சதி செய்கிறது என்கிறதைப் புரிந்து கொண்டவர்களுக்கெல்லாம் ஒரே படபடப்பு.

அண்ணாவைக் காணவில்லையே என்று ஒரு தவிப்பு.



புலனாய்வுத் துறையினர் நிமிடத்துக்கு நிமிடம் கருப்புச் சட்டையுடன் மெமோரியல் அரங்கில் குழுமுகிறவர்களையெல்லாம் அடையாளம் பார்த்துத் தகவல் மேலிடத்துக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.



கூட்டத்தில் சட்டென்று ஒரு சலசலப்பு.

''அதோ அண்ணா! அண்ணா'' என்று கழகத் தோழர்கள் தங்கள் மகிழ்ச்சிக் குரலை எழுப்பினார்கள்.

தந்தை பெரியார் அவர்கள்கூட எதிர்பார்க்காத நேரத்தில் அண்ணா தொளதொளவென்று கருப்புச் சட்டையணிந்தபடி உள்ளே வந்து கொண்டிருந்தார்.

காங்கிரஸ்காரர்களின் திட்டம் பொடிப்பொடியாகிவிட்டது. தடையை மீறி கழகத்தவர் ஒருமுகமாய் தங்கள் வலுவை உணர்த்திவிட்டார்கள்.


ஃ ஃ ஃ

அண்ணாவிடம் ஒரு தோழர் கேட்டார்: ''கருப்புச்சட்டை தைத்துக் கொண்டிருக்கிறீர்களா அண்ணா?''

அண்ணா தமது செங்காவிப் புன்னகையுடன் தெரிவித்தார்: ''காஞ்சிபுரத்தில் காலையில் பெரியார் அவர்களின் அறிக்கையைப் படித்த பிறகுதான் இப்படி ஒரு தடை மீறல் போராட்டம் இருப்பதே எனக்குத் தெரியும். காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு புறப்பட்டு வருவதற்குள் கருப்புச் சட்டையைத் தயார் செய்துகொள்ள முடியுமா? நடிகமணி டி.வி.என். அவர்களிடம் வாங்கிப் போட்டுக்கொண்டு வந்துவிட்டேன். அதுதான் தொளதொளவென்று இருக்கிறது!''

ஃ ஃ ஃ

அண்ணா இதுபோலத் தெரிவித்தபோது, 'கழகத்துக்குள் கருத்து வேறுபாடு என்பது ஒரு ஊடலைப்போன்றது; போராட்டம் என்கிறபோது அந்த ஊடலையே எதிரி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு உண்டாக்கிடக் கூடாது?'' என்பதும்தான் வலியுறுத்தப்பட்டது.



திராவிடர் முன்னேற்றக் கழகம் தோன்றிய பிறகும் அண்ணா இந்தத் தத்துவத்தையே கழகத் தோழர்களின் இதயங்களில் எல்லாம் படியும்படி எழுதினார்; பேசினார்.

சாதாயச் சீர்கேடுகளைச் சுட்டுப் பொசுக்குவதில் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ''இரட்டைக் குழல் துப்பாக்கி'' என்று எடுத்துக்கூறியவர் அண்ணா என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை.



# அண்ணாவும் 50 சவரனும்



அண்ணா அவர்களின் 50-வது பிறந்தநாளைச் சென்னையில் சிறப்பாகத் தமது இல்லத்தில் நடத்திட விரும்பினார் இலட்சிய நடிகர் எஸ. எஸ. ஆர்.

அண்ணா பிறந்தநாள் விழா கோலாகலமாகத் தொடங்கியது. மலர்மாலைகள் கைத்தறி ஆடைகள் மற்றும் பரிசுப் பொருட்களுடன் ஏராளமான தோழர்கள் எல்டாம்ஸ் சாலையிலுள்ள இலட்சிய நடிகரின் புதிய இல்லத்தில் கூடினர்.

பேரறிஞர் அண்ணாவுக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்த இலட்சிய நடிகர் 50 சவரன்களை வழங்கிப் பூரிப்புடன் அண்ணாவைக் கட்டித் தழுவியதும்—தொடர்ந்து கழக முன்னணியினர் அண்ணாவுக்குத் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துவிட்டு மாலைகளையும் கைத்தறி ஆடைகளையும் குவித்துக் கொண்டே இருந்தார்கள்.

வாழ்த்துரைகள் நடந்தன. அனைத்துக்கும் அண்ணா நன்றி தெரிவித்துவிட்டு விருந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். விருந்து முடிந்தவுடன் காஞ்சிபுரத்துக்குப் புறப்பாடு.

அண்ணா செல்வதற்கு முன்னதாகவே புறப்பட்டுப்போன காஞ்சிபுரத்துத் தோழர் ஒருவர் 'தொத்தா'விடம் இலட்சிய நடிகர் கொடுத்த 50 சவரன்களைப் பற்றித் தெரிவித்துவிட்டார். தொத்தாவுக்கு அப்போதுதான் தெரியும்—இலட்சிய நடிகர் இந்த 50 சவரன்களை வழங்கிச் சிறப்புப்படுத்துவதற்காகத்தான் அவருடைய இல்லத்தில் அண்ணாவின் பிறந்தநாளைக் கொண்டாட முடிவு செய்த விவரம்.

அண்ணா காஞ்சிபுரம் வந்து இல்லத்தில் சட்டையை மாற்றிவிட்டு வழக்கம்போல் திராவிட நாடு அச்சகத்துக்குப் புறப்பட்டபோது 'தொத்தா' குரல் கொடுத்தார்.

''எஸ். எஸ். ஆர். வீட்டிலே 50 சவரன் பரிசு கொடுத்தார்களாமே.''

தொத்தா சொன்ன பிறகுதான் அண்ணாவுக்கே அது நினைவு வந்தது. தம்மோடு வந்தவர்களை விசாரித்தபோது அண்ணா பாதுகாத்து வைத்திருப்பார் என்று எண்ணிய அவர்களுக்கு, அண்ணா அதுபற்றி கவனக்குறைவாக இருந்தது தெரிந்தது.

சென்னைக்குத் தகவல் கொடுத்துக் கேட்டால், ''50 சவரனும் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது மேஜை மீதிருந்து நடிகமணி அவற்றை எடுத்து வைத்திருக்கிறார்,'' என்று பதில் வந்தது.

மறுநாள் நடிகமணியே அவற்றை எடுத்துக் கொண்டுவந்து தொத்தாவிடம் சேர்ப்பித்தார்.

## அண்ணாவின் அடக்கம்

**1957**-ல், கழகம் பொதுத் தேர்தலில், நேரடியாகக் குதித்த நேரம்.

பெரியார் அவர்கள் காங்கிரஸ் கட்சியை ஆதரித்துப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். மேடைகளில் முன்னேற்றக் கழகத்தை மிகக் கடுமையாக விமர்சிப்பதில்தான் பெரியார் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து நடத்திய தேர்தல் பிரச்சாரத்தின் முக்கியத்வமே அடங்கியிருந்தது.

தமிழகம் முழுவதும் இப்படி பெரியார் செய்து வந்த பிரச்சாரம் காஞ்சிபுரத்தில் அண்ணாவுக்கு எதிராகவும் நடத்தப்பட்டது.

காஞ்சிக்குப் பெரியார் வருகிறார். கண்டிப்பாக அண்ணாவை கடுமையான சொற்களால் விமர்சிப்பார் என்று அறிந்த தோழர்கள் அண்ணாவிடம் சென்று கூட்டத்தை நடக்கவிடாமல் செய்யப் போவதாகக் கூறினார்கள்.

அண்ணா தோழர்களை அடக்கினார். எவ்வளவு கடுமையாகப் பெரியார் விமர்ச்சித்தாலும் கழகத்தவர் கண்ணியம் மீறிச் செல்லக்கூடாது என்பது அண்ணா விதித்த கட்டுப்பாடு.

பொங்கியெழுந்தவர்களை அடக்கி அமைதிபடுத்திய அண்ணாவின் வீட்டுக்கு எதிரிலேயே காங்கிரஸகாரர்கள் மேடைபோட்டுப் பெரியாரைப் பேச வைக்க ஏற்பாடு செய்துவிட்டார்கள்.

மிருந்த சோதனையான கட்டத்திற்கு தோழர்கள் தள்ளப்பட்டுவிட்டார்கள். இதைப் புரிந்து கொண்ட அண்ணா அன்று முழுவதும் காஞ்சிபுரத்தைவிட்டுப் போகவில்லை.

எந்தவித அசம்பாவிதமும் நடந்துவிடக்கூடாது என்கிற முன்னெச்சரிக்கையோடு அண்ணா அன்று மாலையில் தமது இல்லத் திண்ணையில் ஒரு நாற்காலியைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்.

எதிரே காங்கிரஸ் மேடை.

மேடைமீது பெரியார் கடுமையான சொல்லார்ச்சனை நடத்துகிறார். அண்ணாவோ புன்னகையுடன் அத்தனை வசைமாரிகளையும் காதிலே கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.

அண்ணா அப்படி உட்கார்ந்திருந்தது அன்று அத்தனை தோழர்களையும் கட்டிப்போட்டதுபோல் உட்கார வைத்துவிட்டது.

இதுபோல் தனக்கு எதிராக நடத்தப்படும் பிரச்சாரத்தையே கூடப் பொறுமையோடும் புன்னகையோடும் கேட்கின்ற ஆற்றலைப் பெற்றவராகத் திகழ்ந்தவர் அண்ணா.

**ஏ. எஸ். வேணு**

## பண்டித நேருவின் பாராட்டு

பெத்தநாயக்கன் பேட்டையில் காங்கிரஸ் கமிட்டி செயலாளராக என். வி. நடராசன் இருந்தபோது ஒருமுறை நேரு சென்னை வந்தார். பிராட்வே டாக்கீஸில் நடந்த வரவேற்புக்குத் தானும் வர விரும்பி என். வி. நடராசனிடம் அண்ணா அதற்கான 'பாஸ்' கேட்டார். ஒருவேளை அண்ணா மனம் மாறி காங்கிரசுக்கு வந்துவிடுவார் என்று எண்ணி, அண்ணா கேட்டபடி பத்து பாஸ்கள் கொடுத்தார் நடராசன். மறுநாள் காலை, மேலும் பத்து பாஸ்கள் வேண்டும் என்று அண்ணா சொல்லியனுப்பியபோது, ஒரு கூட்டத்தோடு காங்கிரசில் சேரப் போகிறாரோ என்று கருதினார் என். வி. என்.

பொதுக்கூட்டத்தில் நேரு பேசும்போது முன்வரிசையில் இருந்து அச்சடித்த கேள்விகளை நேருவிடம் கொடுத்தார் அண்ணா. அதைச் சத்தியமூர்த்தி வாங்கிப் படித்து ''நேரு இதற்கெல்லாம் பதில் சொல்லமாட்டார்'' என்று கூறிவிட்டார். உடனே நேரு, சத்தியமூர்த்தியிடம் அண்ணா தந்த கேள்வித்தாளை வாங்கிப் படித்து, ''இதற்கு நான் பதில் சொல்லமாட்டேன் என்று சத்தியமூர்த்தி சொன்னது தவறு. ஆரம்பத்திலேயே தந்திருந்தால் நிச்சயம் பதில் சொல்லியிருப்பேன். இப்போது நேரமாகிவிட்டதால் இக்கேள்விக்கு இன்று மாலை நடக்கும் பொதுக்கூட்டத்தில் பதில் சொல்கிறேன்'' என்றார், நேரு.

அதன்படியே மாலைக் கூட்டத்தில் நேரு, அண்ணாவின் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிட்டு, ''இந்தக் கேள்வி எப்படியிருந்தாலும் கேள்வி கேட்டவரின் சிந்தனையை, அறிவை, ஆற்றலை நான் பாராட்டுகிறேன்'' என்றார்.


## அண்ணாவின் நூலறிவு!

அண்ணா, கல்லூரி நாட்களிலிருந்து நாளும் புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் உடையவர். எடுத்த புத்தகத்தைப் பொழுது விடிந்தாலும் படித்து முடித்துவிட்டே தூங்குவார்.

அறுவைச் சிகிச்சைக்கு அமெரிக்கா சென்றபோது, அவர் பல நூல்களை வாங்கினார். அவை கப்பலில், அவர் மறைந்த ஒரு மாதம் கழித்தே வந்து சேர்ந்தன.

விஞ்ஞானம், இலக்கியம், வரலாறு, பொருளியல் என நூலகத்தில் புதிதாக வந்த எதையும் அவர் படிக்காமல் விட்டதில்லை. பழைய புத்தக வியாபாரிகள் இருவர் அவருடைய நண்பர்களாக இருந்தனர். வாரம் ஒருமுறை ஒரு சாக்கு மூட்டையில் பழைய புத்தகங்கள் அவரைத் தேடி வரும். மறு வாரம் புதிய மூட்டை வந்தபின் பழைய மூட்டை திரும்பும். தன் சகோதரியின் மகளுக்கு 'கான்சர்' வந்ததும், கான்சர் வியாதி பற்றி வந்துள்ள புத்தகங்கள் அனைத்தையும் வாங்கிப் படித்து முடித்துவிட்டார். தனக்கு அந்த வியாதி வந்தபோது, டாக்டர்களுக்கும் முன்பே தன் முடிவைத் தெரிந்தும் வைத்திருந்தார் அவர்.

அறுவை சிகிச்சை முடிந்து அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்து வந்தபோது, இந்தியத் தூதராக இருந்த திரு. தவானின் விருந்தாளியாக அவர் ஒரு நாள் இருந்தார். அன்றைய தினம் இரவு தவான், அவரிடம் ''உங்களுக்கு ஏதாவது வேண்டுமானால் சொல்லுங்கள்—செய்கிறேன்'' என்றார். ''எனக்கு இரவில் புத்தகங்கள் படித்தால்தான் விடியற்காலையில் தூக்கம் வரும்'' என்று அண்ணா கூற, திரு. தவான் தன் நூலகத்திலிருந்த பல புத்தகங்களைக் கொண்டுவந்து கொடுத்தார். புத்தகங்கள் பலவற்றைப் புரட்டிவிட்டு அண்ணா திரும்ப வைத்துவிட்டார். இதைக் கண்ட திரு. தவான், ''என்ன, உங்களுக்கு விருப்பமில்லாத புத்தகங்களா?'' என்று கேட்க, ''இல்லை, இவையெல்லாம் நான் ஏற்கெனவே படித்து முடித்துவிட்ட புத்தகங்கள்'' என்றார் அண்ணா! இங்கிலாந்தில் வெளியான சமீபகாலப் புத்தகங்கள் அவர் படித்து முடித்தவையாக இருந்ததை அறிந்து வியந்துபோனார், இந்தியத் தூதர்.



## வாரியாருக்கு வந்த இக்கட்டு!

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கிருபானந்த வாரியார் திருப்பரங்குன்றத்தில் பேசும்போது, ''தமிழ் நாட்டில் பெரியாறு இருக்கும்போது, பெரியாறு ஓடலாமா?—என இரு பொருள்படப் பேசிவிட்டார். அதைக் கண்டித்து, 'பெரியார் ஓடுவதில் தவறில்லை—வாரியார்தான் ஓடக்கூடாது' என்று திராவிட நாட்டில் அண்ணா எழுதினார். அதைத் தொடர்ந்து வாரியார் சொற்பொழிவு நடக்கும் இடங்களில் எல்லாம் குழப்பம் ஏற்பட்டது.

வாரியார் இதைப்பற்றி டாக்டர் சிற்சபையிடம் முறையிட்டார்: ''நான் பெரியாரைக் குறிப்பிடவில்லை. பெரிய ஆற்றைத்தான் குறிப்பிட்டேன். அண்ணா விரும்பும் தமிழைத்தானே நான் வளர்க்கிறேன்! இதை அண்ணாவிடம் சொல்லுங்கள்'' என்றார். சி.வி.எம். அண்ணாமலை மூலம் அண்ணா இதை அறிந்தார். வாரியாருக்கு வந்த நெருக்கடியைப் போக்க, அடுத்து வந்த திராவிட நாடு இதழில் வாரியாரின் தமிழாற்றலைப் புகழ்ந்து ஒரு கட்டுரையில் குறிப்பிட்டார். குழப்பங்கள் ஓய்ந்தன.

**இரா. ஜனார்த்தனம், எம். ஏ**





## சீனத்து சன்யாட்சன்போல் தமிழகத்துக்கு அண்ணா

மா. சீ. வீரப்பன், சிங்கப்பூர்.

அண்ணாவின் மறைவுச்சேதி கேட்டதும், சிங்கப்பூர், மலேயா வாழ் தமிழர்கள் உள்ள மெல்லாம் சோக ரோகை பரவிவிட்டது. இத்தகைய சோகத்தை கடல் கடந்த நாட்டுத் தமிழர் உள்ளத்திலும் தோற்றுவிக்கக் கூடிய வலிமை கொண்ட தலைவர் அண்ணா என்பதை உணர்ந்து மலேயா பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தமிழர்களிடம் வியப்புத் தெரிவித்தார்.

மருத்துவமனையில் அண்ணா உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த போது சென்னையில் அவருக்கு எந்தெந்த மருந்துகளையெல்லாம் கொடுத்துப் பார்த்துவிட்டு ஒரு குறிப்பிட்ட மருந்துக்காகத் தவித்துக் கொண்டிருந்தபோது சிங்கப்பூரிலிருந்து மருந்து வாங்கி விமான மூலம் அனுப்பி வைத்த பெருமை சிங்கப்பூர் தமிழர்களுக்கு உண்டு. அப்படி முயற்சித்தும் அண்ணா பிழைக்கவில்லை.

அவருடைய உடலை லெனினின் உடல் பேணப்பட்டு வருவது போல் பாதுகாக்க வேண்டும் என்று நாங்கள் ஒரு கோரிக்கையை தமிழக ஆளுநருக்கும், இந்தியப் பிரதமருக்கும், தி. மு. க. தலைமைக்கும் விடுத்தோம். ஆனால் அது நிறைவேறவில்லை.

வங்கக் கடலோரம் அண்ணாவுக்கு சந்தனக் கூடு அமைத்தும், பளிங்குப் பீடம் நிறுவி, எந்தத் தலைவனுக்கும், எந்த நாட்டிலும் கிடைத்திராத பெருமையை கலைஞர் அவர்கள் செய்தார் என்பது கேட்ட பிறகு ஒருவாறு எங்களுக்கு ஆறுதல் பிறந்தது.

அண்ணாவுக்கு காலத்தால் அழிக்க இயலாத ஓர் நினைவுக் கட்டம் அமைத்த தமிழக அரசு அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றை உலகறியும் ஆங்கிலத்தில் பெரியதொரு நூலாக்கித்தரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

சீனத்துக்கு ஒரு சன்யாட்சன் கிடைத்தது போல் தமிழகத்துக்குக் கிடைத்த அரசியல் ஞானி அண்ணா. இந்த பெருமை தமிழர் உள்ள மெல்லாம் நிலைத்திருக்கக்கூடிய பெருமையாகும்.

பேட்டி

**தமிழ் முரசு தினகரன்**





### அண்ணன் பிறந்த நாள்

**படம்—1**


15—9—74 அன்று காஞ்சியில் அண்ணாவின் அன்னையார் பங்காரு அம்மையாரைச் சந்தித்து கழகத்தலைவர் நலம் விசாரித்தார்.

**படம்—2**

சென்னையில் அண்ணன் சிலைக்குப் பொதுச் செயலாளர் நாவலர் மலர்மாலையிட்டு வணங்கினார்.

**படம்—3**

பொதுச் செயலாளருடன் அமைச்சர் என். வி. என். மற்றும் மாவட்டக் கழகத் தோழர்கள்.




உள்ளமுற்றோர்க்கு
உதவிட
உன்னதமான வழி!
செலவு ஒரு ரூபாய்
10,00,000
வரவோ பல லட்ச ரூபாய்
முதலமைச்சரின்
"உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிதிக்காக"
தமிழ்நாடு பரிசுச் சீட்டு
மாபெரும் சிறப்புக் குலுக்கல்!
இதுவரை கண்டிராத ஏராளப் பரிசுகள்! உயர்வான தொகை பெற
உங்கள் நல்வாய்ப்பு இன்றே!
முதல் பரிசு இரண்டாவது பரிசு
சிறப்புப் பரிசுகள் (எல்லா வரிசைகளுக்கும் பொது)
ரூ. 10 லட்சம் ரூ. 2 லட்சம்
மொத்தப் பரிசுகள் 12312 (10 வரிசைகள்)
முதல் பரிசு
ஒவ்வொரு வரிசைக்கும்
ரூ. 1 லட்சம்
மற்றும்
ஆயிரக்கணக்கான
கவர்ச்சிப் பரிசுகள்.
மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 35 லட்சம்
இன்றே வாங்குங்கள்
பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்!
குலுக்கல் நாள்
28-9-'74
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு,
சென்னை-600009.


* லட்சியப் போராட்டத்திற்காக
தன்னை நிச்சயப்படுத்திக் கொண்ட
வீரனின் வெற்றி வரலாறு !
அக்டோபர் வெளியீடு
நஹாதா அளிக்கும்...
புதிய மனிதன்
டைரக்ஷன் திருமலை மகாலிங்கம்
திரைக்கதை-வசனம் AL நாராயணன்
சங்கர்-கணேஷ் · வாலி · அமிர்தம் · வெங்கட்டரத்தினம்


அற்புத அலுமினியம் உற்பத்தி உயர
தீவிர திட்டம் தீட்டி அதை ஆவன செய்ய.....
மதராஸ் அலுமினியம் கம்பெனி இப்பொழுது
ஈடுபட்டுள்ளது. தனது தற்போதைய ஆண்டோன்றுக்கு
உற்பத்தித்திறன் 12,500 டன்களாகும்.
இதை 25,000 டன்களென படிப்படியாக உயர்த்த
ஏற்பாடு செய்து வருகிறது.
இத்தாலி நாட்டைச் சேர்ந்த மிகவும்
பிரபல கம்பெனியான மாண்டிகாடினி எடிஸன்
ஒத்துழைப்புடன் இயங்கி வரும் இந்த நிறுவனம்
தனியார் துறையில் மாபெரும் ஸ்தாபனமாக
தென்னகத்தே விளக்கிவருகிறது. மேலும்
சீக்கிரமே தகடுகள் தயாரிக்கும் உருட்டாலை
முதலியன ஸ்தாபிக்கவும் ஏற்பாடுசெய்து வருகின்றது.
இக்கம்பெனி நமது நாட்டின் அந்நிய செலாவணியை
பெருமளவு மிச்சப்படுத்துவதுடன் அதன் சீரமைப்பு
பணியிலும் பெரும்பங்கு கொண்டுள்ளது.

MALCO

## மதராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட்

பதிவு காரியாலயம்
கோயமுத்தூர்

தொழிற்சாலை
மேட்டூர் அணை



FDS/MAC|TM

